பக்கங்கள்: 11 விலை : 30/-

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 24 திங்கட்கிழமை 11.10.2021 கதிர் 340

இனிது ரகசியம் அல்ல!

“முழு உலகமும் ஒரு நாடக மேடை. அதில் ஆண்களும் பெண்களும் வெறும் நடிகர்கள். அந்த மேடையில் அவர்கள் தோன்றி மறைபவர்கள். ஒருவர் தனது வாழ்நாளில் பல பாத்திரங்களை ஏற்று நடிப்பவர். வயதுகளில் ஏழு பிரிவுகளில் பக்கம்02 »

# அடுத்த வருடத்துக்குள் புதிய அரசமைப்பு உறுதி

## இராணுவத்தின் 72ஆவது ஆண்டு விழாவில் ஜனாதிபதி கோட்டாபய பகிரங்க அறிவிப்பு



**அன்று நான் உறுதியளித்தவாறு, புதிய அரசமைப்பு ஒன்றை வழங்குவதற்கு, அடுத்த வருடத்துக்குள் நடவடிக்கை எடுப்பேன். மக்களின் எதிர்பார்ப்புக்கமைய, புதிய தேர்தல் முறைமையொன்றையும் அடுத்த வருடத்துக்குள் உருவாக்குவேன்.**

**- இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.**

**இலங்கை இராணுவத்தின் 72 ஆவது ஆண்டு பூர்த்தியையொட்டி நேற்று அநுராதபுரம், சாலியபுர இராணுவ முகாமில் பிரதான நிகழ்வு நடைபெற்றது.** ☞10

## மேலும் 35 பேர் மரணம்

இலங்கையில் மேலும் 35 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன உறுதிப்படுத்தியுள்ளார்.

அதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா ☞2

## நேற்று தொற்று 720

இலங்கையில் நேற்று 720 பேர் கொரோனா வைரஸ்தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய ☞10

## தமிழ் அரசியல் கைதி ஒருவர் 12 வருடத்தின் பின் விடுதலை

### நிரபராதி என நீதிமன்றம் தீர்ப்பு

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு 12 வருடங்களாகச் சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதி ஒருவர் நேற்று மொனராகலை நீதிவான் நீதிமன்றத்தால் நிரபராதி எனத் தீர்ப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்று, சின்னப்பனங்காட்டை சேர்ந்த கதிரவேலு கபிலன் (வயது 29) என்பவரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டவராவார்.

கொழும்புபுதியமகசின்சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இவர் பி.சி.ஆர். பரிசோதனைகளை அடுத்து நேற்று மதியம் சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்டு உறவுகளுடன் இணைந்துள்ளார் என்று குடும்பத்தினர் தெரியப்படுத்தியுள்ளனர்.

இவர் கடந்த 20.05.2009 அன்று – போர் நிறைவுக்கு வந்த பின் ☞10

## நெல் விதைப்பில் சுமந்திரன் எம்.பி.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தனது வயலில் உழுது நெல் விதைப்பில் ஈடுபட்டார்.

கிளிநொச்சி, கண்டாவளைப் பகுதியில் உள்ள தனது வயலில் நேற்றுக் காலை உழுது நெல் விதைப்பில் அவர் ஈடுபட்டார்.

## இந்திய இராணுவத் தளபதி நாளை இலங்கை விஜயம்



இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் மனோஜ் முகுந்த் நரவனே, நாளை செவ்வாய்க் கிழமை இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இலங்கையின் பாதுகாப்பு பதவி நிலை பிரதானியும் இராணுவத்தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வாவின் வேண்டுகோளை ஏற்று இந்திய இராணுவத் தளபதி இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இந்திய இராணுவத் தளபதியின் விஜயத்தின்போது ☞2

## 100 பிக்குகள் சகிதம் இந்தியா பறக்கின்றார் அமைச்சர் நாமல்

விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ 100 இற்கும் மேற்பட்ட பௌத்த தேரர்கள் சகிதம் எதிர்வரும் 20ஆம் திகதி இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்தியாவின் குஷி நகரில் அமைக்கப்பட்டுள்ள சர்வதேச விமான நிலையத் திறப்பு விழாவில் பங்கேற்பதற்காகவே அவர் அங்கு செல்கின்றார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு விடுத்த அழைப்பின் பிரகாரம், மஹிந்தவின் விசேட பிரதிநிதியாகவே நாமல் இந்தியா செல்லவுள்ளார்.

குறித்த விமான நிலையம் பௌத்த கலாசாரத்தை விருத்தி செய்யும் நோக்கில் உருவாக்கப்பட்டது என இந்தியத் தரப்பு கூறுகின்றது.



நாமல் குழுவினரின் பயணத்துக்கு இந்தியாவால் விசேட விமான வசதி ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், சுற்றுலாத்துறை அமைச்சர் ஆகியோரும் நாமலுடன் செல்லவுள்ளனர்.

## பெற்றோல் குண்டு தாக்குதல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். அரியாலைப் பகுதியில் உள்ள வீடொன்றின் மீது நேற்று அதிகாலை இனந்தெரியாத நபர்களால் பெற்றோல் குண்டு தாக்குதல் ☞2

## சிறந்த ஆட்சியை முன்னெடுப்பதற்கு நேர்மையான அமைச்சரவை தேவை

### கோட்டா தலைமையிலான அரசை சாடினார் மைத்திரி

நாட்டின் தலைவர் நேர்மையாகவும் சிறந்த குணவியல்பு கொண்டவராகவும் இருந்தால் போதாது. அவர் சிறந்த ஆட்சிப் பயணத்தை முன்னெடுக்க வேண்டுமாயின் நேர்மையான அமைச்சரவையும் ☞2



## லிட்ரோ எரிவாயுவின் விலை நேற்று நள்ளிரவு முதல் உயர்வு

நாட்டில் நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் சமையல் எரிவாயு விலையை லிட்ரோ நிறுவனம் தீர்மானித்துள்ளது.

அதற்கமைய 12.5 கிலோ கிராம் லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலை 1,257 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி, ☞2



## இனி இது ..............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் நடிக்கின்றார்...” இப்படித் தொடருகின்றது சேக்ஸ்பியரின் ஓர் உரைச்சித்திரம்.

“உலகமே ஒரு நாடாக மேடை. நாமெல்லாம் அதன் நடிகர்கள்...” என்ற பொதுமையை நேற்று ஒரு தடவை நமக்கு நினைவூட்டிச் சென்றிருக்கின்றார் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன்.

அரசியல் என்பதே பெரும் நடிப்புத்தான். அதனால்தான் எம்.ஜி.ஆர்., என்.டி.ஆர்., ஜெயலலிதா, றொனால்ட் றேகன் போன்ற நடிகர், நடிகைகளினால் அரசியலில் பெரும் செல்வாக்குச் செலுத்த முடிந்தது.

வெற்று வேட்டு அறிக்கைகளில் இருந்து போராட்ட முழக்கங்கள் வரை நமது தமிழ் அரசியல்வாதிகளின் அரசியல் நடவடிக்கைகள் எல்லாம் கூட அப்பட்டமான - அபத்தமான - நடிப்புத்தான் என்பது நமக்குத் தெரிந்ததே.

அரசியல்வாதி சுமந்திரனையும் இந்த நடிப்பு வியாதி தொற்றியதில் எனக்கு ஓர் ஆச்சரியமுமில்லை. எதிர்பார்க்கப்பட்டது தான்.

சுமந்திரனை, சம்பந்தன் ஐயாவும், மாவை சேனாதிராசாவும் அரசியலுக்குக் கூட்டி வந்தபோது அவர் மேல்தட்டு வர்க்க அரசியலே நடத்தினார். அவர் ஒரு Elite Crowd இற்கான அரசியலை மட்டுமே நடத்துகின்றார், சாமானியர் மட்டத்துக்கோ, கீழ் மட்ட மக்களுடனோ இறங்கி அரசியல் செய்கின்றார் இல்லை என்ற ஒரு கருத்து நிலைப்பாடு இருந்தது உண்மைதான். அதை உடைத்து மாற்ற வேண்டிய அரசியல் கட்டாயம் அவருக்கு இருந்ததும் அவரைச் சூழ இருப்பவர்களால் அது உணரப்பட்டதும் உண்மைதான்.

களத்தில் இறங்கி, வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு, வெள்ளத்துக்குள் இடங்களைப்பார்வையிட்டபடி படத்துக்குப் 'போஸ்' கொடுக்கத் தொடங்கிய போதும், வீட்டு வாசல்களில் கொரோனா கால நிவாரணப் பொதிகளைத் தாமே காவிச் சென்று அவர் கொடுப்பதான படங்கள் சமூக வலைத் தளங்களில் உலாவத் தொடங்கியதும் சரியான சினிமாப் பட சூட்டிங் ஆரம்பமாகி விட்டது என்றே நினைத்தேன்.

அதன் உச்சம் - கிளைமாக்ஸ் - கண்டாவளையில் அவரது நெல் காணியில் நேற்று படமாக்கப்பட்டிருக்கின்றது போலும். நானும் திருகோணமலையில் பரம்பரை விதைப்பு வயல்களை வைத்திருந்த குடும்பத்தின் வழித் தோன்றல்தான். நெல் விதைப்பு, அறுவடை தொடர்பில் சில அடிப்படைகள் எனக்கும் புரியும், தெரியும்.

நேற்றைய பட ‘சூட்டிங்கின்’ டைரக்டர் பல 'டெக்னிக்கல்' பிழைகளை விட்டுவிட்டார் என்றுதான் தோன்றுகின்றது. உழுத காணியில்தான் நெல் விதைப்பே தவிர, நெல்லோ, புல்லோ முளைத்த காணியில் அல்ல. இப்படி பல ‘டெக்னிக்கல்’ குறைபாடுகள் சமூக வலைத் தளங்களுக்கு நல்ல தீனி. பிய்த்து உதறுகின்றன.

இந்தச் சமயத்தில் ஒரு பழைய விடயத்தைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். இதை விட்டால் நான் எப்போது என் விவகாரங்களை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வது? அதனால் கூறுகிறேன்.

2004ஆம் அல்லது 2005 ஆம் ஆண்டை ஒட்டிய காலப் பகுதியாக அது இருக்கலாம். சரியாக நினைவில் இல்லை.

புலிகளின் மதியுரைஞர் அன்டன் பாலசிங்கத்துடன் மிக நெருக்கமாகப் பழகிய ஊடகவியலாளன் நான் என்பது பலருக்கும் தெரிந்திருக்கும். சொந்தத் தம்பி போல அவர் என்னைப் பேசுவார், திட்டுவார், அரவணைப்பார், ஆலோசனை கூறுவார், வழி காட்டுவார்.

அந்தச் சமயத்தில் புலிகளின் தலைமைக்கும் அவருக்கும் இடையில் ஒரு சற்று நெருடல் இருந்தது. இரு தரப்புகளுக்கும் இடையில் நான் காத்திரமான பங்களிக்க வேண்டிய ஒரு தேவையும் எழுந்தது.

அப்போது கராட்டியில் புகழ் பெற்ற தேசிய வீரர் ஒருவரை புலிகளின் விளையாட்டுத் துறைப் பகுதிப் பொறுப்பாளர் பாப்பா, தலைவர் பிரபாகரனிடம் கூட்டிச் சென்றிருந்தார். என் நினைவு சரி என்றால் அந்தக் கராட்டி வீரரின் அல்லது மாஸ்டரின் பெயர் பொனிபஸ். அவர் அந்த சந்திப்பின் நினைவாக கராட்டி வீரர்கள் அணியும் மேலங்கி ஒன்றை தலைவர் பிரபாகரனுக்கு பரிசளித்தார். அதைத் தலைவருக்கு அணிவித்து அவருடன் நின்று அந்தச் கராட்டி வீரர் படம் எடுத்தார். அந்தப் படத்தை பாப்பா, அப்போது புலிகளின் செய்தித் தொடர்பாளரான தயா மாஸ்டர் மூலம் என் மின்னஞ்சலுக்கு அனுப்ப நான், அதனை அப்போது ஆசிரியராக இருந்த ‘உதயன்’, ‘சுடர்ஒளி’ பத்திரிகைகளில் பிரசுரித்து விட்டேன்.

அதனை லண்டனில் இருந்து பார்த்த மதியுரைஞர் பாலசிங்கம் கொதித்துப் போய்விட்டார். எனக்குப் பேச்சோ பேச்சு. என்னைத் திட்டி வசைபாடினார்.

“நீயும் பாப்பாவும் சேர்ந்து தேசியத் தலைவரைக் கராட்டி வீரனாகக் காட்டி, கொச்சைப்படுத்தி விட்டீர்கள். விசராடா உங்கள் இரண்டு பேருக்கும்?” என்று திட்டுக்கு மேல் திட்டு.

“தலைவர் பிரபாகரன் என்ன உங்களுக்கு ‘கௌரவம்’ படத்தில் நடிக்கும் சிவாஜி கணேசனா?” என்றும் அவர் சீற்றத்துடன் கேட்டமை இன்றும் எனக்கு நினைவில் உண்டு.

“டேய்.... தலைவரின் ஒரு படத்தை பிரசுரத்துக்கு அனுமதிக்க முன் அவரின் தலையில் ஒரு நரை முடி தெரிகின்றதா என்று பார்த்து செக் பண்ணி, அனுப்புற ஒரு காலம் இருந்தது. உங்களுக்கு அதெல்லாம் எங்கடா விளங்கும்? தலைவர் என்ற ஒரு மகத்தான மனிதர் பற்றிய நம்பிக்கையை - இமேஜை - பிம்பத்தை - கட்டி எழுப்ப எவ்வளவு நுட்பமும், கவனிப்புச் சிரத்தையும், அவதானமும் எடுக்கப்பட்டன என்பது உங்களுக்கு தெரியுமாடா? அவரை கராட்டி வீரன் போன்ற நடிகனாகக் காட்டி அந்தப் பிம்பத்தை அழித்துப் போட்டீர்கள்” என்றெல்லாம் வசை பாடினார்.

இந்த அர்ச்சனை அடுத்த இரண்டு, மூன்று மாதங்கள், அவ்வப்போது நான் லண்டனில் அவருக்கு தொலைபேசி அழைப்பு எடுக்கும் போதெல்லாம் தொடர்ந்தது.

இப்போது சுமந்திரனைச் சூழ நிற்கும் அவரது அள்ளக்கைகளுக்கும் சுமந்திரன் என்ற பிம்பத்தைக் கட்டி எழுப்பத் தெரியவில்லை என்றே எனக்குத் தோன்றுகின்றது.

தலைவரின் உதாரணத்தை நான் காட்டியமைக்காக தலைவர் பிரபாகரனையும் சுமந்திரனையும் நான் ஒரே தராசுத் தட்டில் வைத்து ஒப்பிட்டு விட்டேன் என்று இன்னொரு ரவுண்ட் என் மீது வசைபாடத் தொடங்காதீர்கள்.

அரசியல் தலைவர்களைச் சூழ நிற்போர், உதவியாளர்கள், அள்ளக்கைகள், எப்போதும் கொஞ்சம் அவதானமாக இருக்க வேண்டும். அவசரப்பட்டு விடயங்களை உஷார் மடையர்களாகிக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கி விடக் கூடாது.

நேற்றைய ‘சூட்டிங்’கின் அனைத்துக் படங்களையும் சமூக வலைத் தளத்தில் ஏற்றியதன் மூலம் சுமந்திரன் ஒரு ‘மகா நடிகர்’ என்ற பட்டத்தைத் தான் அள்ளக்கைகள் வாங்கிக் கொடுத்திருக்கின்றன என்பது என் கணிப்பு.

அது அவரின் தனிப்பட்ட காணி, தனிப்பட்ட விதைப்பு, உழுதல், டிராக்டர் ஓட்டம் எல்லாம். ஒரு தலைவராக உருவெடுத்து வரும் அவரின் இந்தப் படங்களை சமூக வலைத்தளங்களில் ஏற்றம் செய்ய முன்னர் ஒன்றுக்கு இரண்டு தடவைகள் சிந்தித்திருக்கலாம். ஒன்றிரண்டு படங்களுடன் நிறுத்தியிருக்கலாம். தவறிழைத்து விட்டனர்.

எது, எப்படி என்றாலும், நான் செய்வது யதார்த்த அரசியல்தான் என்று அடிக்கடி கூறும் சுமந்திரனுக்கு, அதற்குப் பின்னால் ஒரு நடிப்பு அரசியலும் தேவைப்படுகின்றது என்ற யதார்த்தமும் புரியத் தொடங்கியிருக்கின்றது. ஆகவே அவர் பிழைத்துக் கொள்வார்.

(பி.கு: வாசகர்கள் தகவலுக்காக நானே ஓரிரண்டு படங்களை இணைத்துள்ளேன்.)

- மின்னல் -







## மேலும் 35 பேர் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாவுகளின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 331 ஆக அதிகரித்துள்ளது என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 35 பேரில் 17 பெண்களும், 18 ஆண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதில் பெண் ஒருவர் 30 வயதுக்குட்பட்டவர். 3 ஆண்கள், ஒரு பெண் என 4 பேர் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 30 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 15 ஆண்களும், 15 பெண்களும் அடங்குகின்றனர்.

## இந்திய இராணுவத் தளபதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவின் பங்கேற்புடன் ஸ்ரீ ஜயவர்தன புர இராணுவ தலைமையகத்தில் எதிர்வரும் புதன்கிழமை நடைபெறவுள்ள ஊடகவியலாளர் சந்திப்பிலும் அவர் கலந்துகொள்ளவுள்ளார்.

அத்தோடு இந்தியப் படையினரின் பங்கேற்புடன் நடைபெற்று வருகின்ற ‘மித்ர சக்தி’ இராணுவக் கூட்டுப் பயிற்சிகளின் இறுதிக்கட்ட நிகழ்வுகளையும் அவர் பார்வையிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பெற்றோல் குண்டு ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்பட்டதோடு வீட்டின் ஜன்னல் கண்ணாடிகள் அடித்து நொறுக்கப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

குறித்த வீட்டின் மதில் மேல் ஏறிச் சென்ற இருவர் வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளை அடித்து நொறுக்கியதுடன் பெற்றோல் குண்டு வீசித் தாக்கியதில் அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து தடவியல் நிபுணர்களின் உதவியுடன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சிறந்த ஆட்சியை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் தலைவருடன் கட்டாயம் இருக்க வேண்டும்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

வேலை செய்யக்கூடிய நேர்மையான அமைச்சரவை இருந்தமையினாலேயே, முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாக்க தேசிய மற்றும் சர்வதேச அரசியலில உண்மையான மக்கள் நலன் சார்ந்த தலைமைத்துவத்தைப் பெற்றுக்கொள்ள முடிந்தது என்றும் அவர் மேலும் கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவரும் முன்னாள் பிரதமருமான அமரர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் 21ஆவது நினைவேந்தல் நிகழ்வு, சுதந்திரக் கட்சியின் தலைமையத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## லிட்ரோ எரிவாயுவின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய விலை 2 ஆயிரத்து 750 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

5 கிலோ கிராம் லிட்ரோ எரிவாயு சிலிண்டர் 503 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு புதிய விலை 1,101 ரூபாவால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2.5 கிலோ கிராம் லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் 231 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு புதிய விலை 520 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622



காலைக்கதிர் Kalaikkathir

# சிங்கம் போல யுத்தத்தை முடித்த பொன்சேகா எம்.பியானதும் நரி போன்று செயற்படுகின்றார்!

## சி.பீ.ரத்நாயக்க சாட்டை



சிங்கம் போல யுத்தத்தை முடித்த முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா, நாடாளுமன்றம்வந்தபிறகுநரிபோல செயற்படுகின்றார் என அமைச்சர் சீ.பீ. ரத்னாயக்க விமர்சித்துள்ளார்.

நுவரெலியா, கொத்மலை பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் சமகாலஅரசியல்நிலைவரம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு விமர்சித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் -

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது தற்போதைய ஜனாதிபதி பாதுகாப்புச்செயலாளராக செயற்பட்டார். இவர்களின் ஆதரவு இருந்ததால் அன்று சிங்கம்போல சரத்பொன்சேகா யுத்தத்தை முடித்தார். ஆனால் நாடாளுமன்றம் வந்த பிறகு நரி போல் செயற்படுகின்றார்.

பாரம்பரிய வைத்திய முறைமையைக் கொச்சைப்படுத்தும் வகையில் அவர் கருத்து வெளியிட்டுள்ளார். நாம் பாரம்பரிய வைத்திய முறைமையை மதிக்க வேண்டும். அன்று நாம் உர மானியம் வழங்கினோம். ஏன் அவ்வாறு செய்தோம்? விவசாயிகள், விவசாயத்தில் ஈடுபடுகின்றமை குறைந்தது. விவசாயிகளின் பிள்ளைகள் தொழிற்சாலைகளுக்குச் சென்றனர்.

இதனால் அரிசியைக் கூட இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே, விவசாயத்தைப் பாதுகாப்பதற்காகவே அந்த முடிவு எடுக்கப்பட்டது.

அதேவேளை, பால் மா, சீமெந்து உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்படும். அடுத்த வாரத்துக்குள் நிலைமை வழமைக்கு திரும்பும் எனக் கூறியுள்ளார்.

# வாகன விபத்துக்களில் மூவர் பரிதாபமாக சாவு



பிலியந்தலை, கெபிதிகொல்லேவ மற்றும் புனரின் ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

பிலியந்தலைநகரில்நிறுத்திவைக்கப்பட்டிருந்த லொறி ஒன்றின் கதவை திறக்க முற்பட்ட போது அதில் மோதி மோட்டார் சைக்கிள் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது, வீதியில் பயணித்த மற்றுமொரு லொறியில் மோட்டார் சைக்கிள் மோதியதில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் படுகாயமடைந்துள்ளார். பின்னர் படுகாயமடைந்த நிலையில் அவர் களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதேபோல், கெபிதிகொல்லேவ, எடவீரகொல்லேவ பிரதேசத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து மின் கம்பம் ஒன்றில் மோதியதில் 31 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

செட்டிகுளம் விசேட அதிரடிப் படை முகாமில் பணி புரியும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, பூனரின் பிரதேசத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி கவிழ்ந்ததில் 24 வயதுடைய இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்

# சடலங்களை உறவினர்களிடம் கையளிப்பதில் மன்னார் வைத்தியசாலையில் தாமத நிலை

## மக்கள் விசனம்

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று உயிரிழக்கின்ற அல்லது உயிரிழந்த பின் சடல பரிசோதனைக்காக கொண்டு செல்கின்ற சடலங்கள், பலத்த தாமதத்தின் பின்னர் உறவினர்களிடம் கைகயளிக்கப்படுகின்றன என பாதிக்கப்பட்டவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அண்மைக்காலமாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில், சிகிச்சை பெற்று உயிரிழந்த அல்லது உயிரிழந்த பின் சடல பரிசோதனைக்காக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படுகின்ற சடலங்கள் தாமதித்த பின்னரே உறவினர்களிடம் கையளிக்கப்படுகின்றன என பாதிக்கப்பட்டவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். இந்த விடயத்தில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை நிர்வாகம், அசமந்தப் போக்குடன் நடந்து கொள்வதாக பாதிக்கப்பட்டவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வீடுகளில் இயற்கை மரணம் எய்திய அல்லது மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் மரணமடைந்தவர்களின் சடலங்கள் வைத்தியசாலையில் வைத்து உடனடியாக பி.சி.ஆர். அல்லது அன்டிஜன் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகிறது.

ஆனாலும், குறித்த பரிசோதனை அறிக்கைகள் தாமதித்து வருகின்ற நிலையில் சடலங்கள் சுமார் 2 நாள்கள் வரை பொது வைத்தியசாலையின்பிரேதஅறையில்வைக்கப்பட்டு, தாமதிக்கப்பட்ட பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்படுகின்றன என பாதிக்கப்பட்டவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கடந்த 6 ஆம் திகதி அதிகாலை உயிரிழந்தார் எனக் கூறப்படும் நானாட்டான் பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட வைத்தியர் ஒருவரின் சடலம் உடனடியாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, எவ்வித தாமதங்களும் இன்றி உடனடியாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சலக நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு அன்றையதினமேஉறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சுகாதாரத் துறையினருக்கு ஒரு சட்டமாகவும் சாதாரண மக்களுக்கு ஒரு சட்டமாகவும் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளர் உள்ளிட்ட நிர்வாகம் நடந்து கொள்வதாகவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

ஆகவே, எதிர்வரும் காலங்களில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை நிர்வாகம், உயிரிழந்தவர்களின் சடலங்களை உறவினர்களிடம் கையளிப்பதில் தாமதங்கள் இன்றி துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கு மாகாண புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கும் மன்னார் மாவட்ட அரச அதிபருக்கும் இடையில் சந்திப்பு



வடக்கு மாகாணத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பிரதி பொலிஸ்மா அதிபர் பிரியந்த சந்திரஶ்ரீஊண, மன்னார் மாவட்ட செயலகத துக்கு கடந்த வெள்ளிக்கிழமை விஜயமொன்றை மேற்கொண்டார்.

இதன்போது, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்டான்லி டீமெல்லை சந்தித்து, கலந்துரையாடல் ஒன்றையும் மேற்கொண்டார். இதில், மன்னார் மாவட்டத்தின் சமகால நிகழ்வுகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டதுடன் மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# ஶ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் பிராந்திய மேலாளருக்கு இந்திய நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிப்பு

இந்தியப் பெண் ஊழியர்களில் ஒருவரை அவமதித்தார் என குற்றம் சாட்டப்பட்ட, ஶ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் பிராந்திய மேலாளருக்கு இந்திய நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

ஶ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் பிராந்திய மேலாளர் லலித் டி சில்வாவை இந்திய நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று டெல்லி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாகச் சட்டத்தரணி அஜய் வர்மா தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு செப்ரெம்பரில் லலித் டி சில்வா, இந்தியாவின் புதுடெல்லியில் விமான நிறுவனத்திலிருந்த காலத்தில், ஶ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் இந்தியப் பெண் ஊழியரை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டில், இந்திய நீதிமன்றம் அவரைக் குற்றவாளியாக அறிவித்தது.

இருப்பினும், கொவிட்சூழ்நிலையின்விளைவாக, குற்றம் சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் முன்னிலையாக இந்தியா செல்லவில்லை என்று மன்றில் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் நீதிவான் தேவ் சரோஹா தனது இடையே ஏற்பட்ட குமிழி ஒப்பந்தத்தின்படி இலங்கை மற்றும் இந்தியா இடையே பயணிகள் விமானங்கள் இயக்கப்படுகின்றமையால் இலங்கையில், செல்லுபடியாகும் பயண அங்கீகாரம்/ஆவணங்கள் உள்ள எந்தவொருவரும் விமானங்களைப் பயன்படுத்தி இந்தியாவுக்குப் பயணம் செய்யலாம்.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான குமிழி ஒப்பந்தம் 09.04.2021 இற்குப் பின்னரே செய்துகொள்ளப்பட்டது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். ஆனால் அதன் பிறகும் குற்றவாளி இந்தியாவுக்கு வர எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான குமிழி ஒப்பந்தத்தின் விதிகளைத் தவறாக விளக்குவது மற்றும் விசாவுக்கு விண்ணப்பிக்கக் குற்றவாளி எந்த முயற்சியும் எடுக்காமலிருப்பது குற்றவாளி இந்த நீதிமன்றத்தில் முன்னிலையாகா மல் இருப்பதற்கான நோக்கத்தைக் காட்டுகிறது எனக் குறிப்பிட்டுள்ளார். எனவே குற்றவாளிக்கு எதிராகப் பிணையில் வெளிவர முடியாத உத்தரவை நீதிவான் பிறப்பித்தார் மற்றும் குற்றவாளி நீதிமன்றத்தில் முன்னிலையாவதை உறுதி செய்ய நடவடிக்கை

# பால் மாக்களின் விலை எகிறியது

*இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ பால் மா மற்றும் 400 கிராம் பால் மாவின் விலையை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.*

*அதன்படி ஒரு கிலோ இறக்குமதி செய்யப்பட்ட பால் மாவின் விலையை 250 ரூபாவாலும் 400 கிராம் பக்கெட்டை 100 ரூபாவாலும் அதிகரிக்க பால் மா இறக்குமதியாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.*

*அதன்படி ஒரு கிலோ இறக்குமதி செய்யப்பட்ட பால் மா பக்கெட்டின் புதிய விலை 1,195 ரூபாவாகவும் 400 கிராம் பக்கெட் விலை 480 ரூபாவாகவும் அதிகரித்துள்ளது. அத்தியாவசியப் பொருள்களின் கட்டுப்பாட்டு விலையை மீறுபவர்களுக்கான அபராதத் தொகையை அதிகரிக்க அரசாங்கம் முன்னதாக தீர்மானித்திருந்தது.*

*இருப்பினும் பால் மா, கோதுமை மா, சிமெந்து மற்றும் எரிவாயு ஆகியவற்றின் கட்டுப்பாட்டு விலையை நீக்கி வர்த்தமானி அறிவித்தல்*

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நெருக்கடியில் சீன உறவு

அமெரிக்கா மற்றும் இந்தியாவுடன் ஓரளவு இணங்கிப் போகும் புதிய இராஜதந்திர நிலைப்பாட்டை கொழும்பு பின்பற்ற தொடங்கியிருப்பதை அடுத்து இலங்கை – சீன உறவில் சிறிது நெருடல் ஏற்பட்டு இருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. அசேதன உரங்கள், இரசாயன கிருமிநாசினிகளின் பாவனைக்கு முற்றாகத் தடை விதித்துள்ள கோட்டாபய ராஜபக்ஷ அரசு, அதன் காரணமாக விவசாயிகளை சேதனப் பசளைகளைப் பயன்படுத்தும்படி வழிப்படுத்தி உள்ளது.

எனினும் நாட்டில் போதிய அளவு சேதன உரங்கள், பசளை வகைகள் கையிருப்பில் இல்லாமையால் சேதன உரங்களை அவசர அவசரமாக இறக்குமதி செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

அவசரமாகத் தேவைப்படும் சேதனப் பசளைகள் என்ற அடிப்படையில் திறந்த கேள்விக் கோரிக்கையின் மூலம் சீன நிறுவனம் ஒன்று தெரிவு செய்யப்பட்டது.

அந்த நிறுவனம் அனுப்பிய சேதனப் பசளை மாதிரியை இலங்கை விவசாய அமைச்சு, தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவை அமைப்பின் பரிசீலனைக்கு அனுப்பியது. அந்தப் பசளையில் தீங்கை ஏற்படுத்தும் ஒரு வகை பாக்டீரியா இருப்பதாக மேற்படி அமைப்பு தனது ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்ட, அதனை இலங்கை விவசாய அமைச்சு பகிரங்கப் படுத்தியது. அதனை அடுத்து இப்போது விவகாரம் பூதாகரமாகி உள்ளது.

இலங்கை விவசாய அமைச்சின் அறிக்கை சீனாவை சீற்றத்துக்குள் ஆழ்த்தி இருப்பதாகக் கூறப்படுகின்றது. இலங்கையின் இந்த ஆய்வறிக்கை முடிவை கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் காட்டமாக விமர்சித்த இருக்கின்றது.

'எர்வினா' என்ற பாதிப்பை ஏற்படுத்தும் பக்டீரியா அந்த உரத்தில் இருப்பதாகக் கூறப்படும் முடிவு அவசரப்பட்டு எடுக்கப்பட்டது, விஞ்ஞான அடிப்படையே அற்றது என்று சீன தூதரகம் தனது பகிரங்க அறிக்கையில் சீறியிருக்கின்றது.

"இந்த வகை சேதனப் பசளைகள் தூய்மைப்படுத்துவதற்காக அறுநூறு பாகை செல்சியஸ் வரை வெப்ப நிலைக்கு உட்படுத்தி, சுத்திகரிக்கப்படுகின்றன. அந்த வெப்ப நிலையில் தீங்கு விளைவிக்கும் நுண்ணுயிர்கள் எல்லாம் அழிந்துவிடும். கேள்விப் பத்திர நிபந்தனைப்படி இந்தத் தேவைப்பாடுகள் எல்லாம் பூர்த்தி செய்யப்பட்டு இந்தப் பசளை வகை தயாரிக்கப்படுகின்றது.

"இலங் கைத் தேசிய தனிமைப்படுத்தல் சேவை அமைப்பு இந்தப் பசளையின் மீது மூன்று நாள் பரிசோதனையின் முடிவில் 'எர்வினா' உட்பட்ட தீங்கு விளைவிக்கும் நுண்ணு யிரிகள்அதில் இருப்பதாக அறிவித்துள்ளது. ஆனால் சர்வதேச பாதுகாப்பு பட்டயத்தின்படி எர்வினாவை அடையாளப்படுத்திக் கண்டுபிடிக்க குறைந்தபட்சம் ஆறு நாள்கள் தேவைப்படும் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் இந்த விடயத்தில் இலங்கையின் பரிசோதனை முறைமையே தவறானது, சர்வதேச நியம முறைமைகளுக்கான தகுதியற்றது" – என்று கொழும்பு அதிகார பீடத்தைக் கடுமையாகச் சாடி இருக்கின்றது சீன தூதரகம்.

மேற்படி சேதனப் பசளை மாதிரியை இலங்கைக்கு அனுப்பி வைத்த சீன நிறுவனம் இத்தகைய சேதனப் பசளை ஐம்பது உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றது. அந்தப் பசளை ரகத்தில் தீங்கு விளைவிக்கக் கூடிய நுண்ணுயிரிகள் உள்ளன என்ற காரணத்தைக் காட்டி அந்தப் பசளையை இலங்கை நிராகரித்து இருப்பது சர்வதேச ரீதியில் சீன நிறுவனத்தின் தகதி, பெயரை நாசப்படுத்தி இருப்பதாக சீனா குமுறுகின்றது.

எது,எப்படி என்றாலும் சீன தூதரகம் சுட்டிக்காட்டியபடி சீன – இலங்கை நட்புறவில் இவ்விடயம் ஒரு பெருங்கீறலை ஏற்படுத்தி விட்ட விவகாரம்தான்.

# அபிவிருத்தி ஆட்சியாளர்கள் இருவரும் மட்டக்களப்பில் மண் மாபியாக்களுடன்!

*ஏறாவூர்பற்று பிரதேச சபை தவிசாளர் சர்வானந்தன் காட்டம்*

மட்டக்களப்பில் இருக்கும் அபிவிருத்தி ஆட்சியாளர்கள் இருவரும் மண் மாபியாக்களுடன் இணைந்து கூடுதலான நகர்வை மேற்கொண்டு செல்கின்றார்கள் என்பதை மக்கள் தற்போது அறிந்துள்ளார்கள் என்று ஏறாவூர்பற்று பிரதேச சபை தவிசாளர் சி.சர்வானந்தன் தெரிவித்துள்ளர்.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் –

மட்டக்களப்பு மாவட்டத்தில் மண் அகழ்வால் இயற்கைச் சூழல் பாரியளவில் அழிவடைந்துள்ளது. ஆகவே இன்று காலநிலையில் பாரிய மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது.

ஏறாவூர்பற்று பிரதேச செயலக பிரிவை பொறுத்தவரையில் உங்களுக்கு தெரியும் பாரிய அளவிலான மண் அகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. இதைத் தடுப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியாக பாடுபட்டு வருகின்றது.

அதேபோன்றுதான் காடுகளை அழித்து தேக்கு மரங்களை வெட்டி ஏற்றிக்கொண்டு செல்கின்றதையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

ஆகவே மாவட்டத்தை பாதுகாக்க வேண்டுமாக இருந்தால் அனைத்து மக்களும் முன்வந்து மரங்களை நடவேண்டும் நடுவதன் மூலமாகவே இயற்கையின் சீற்றத்தில் இருந்து நாம் பாதுகாப்பதுடன் இயற்கையும் எம்மைப் பாதுகாக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நாட்டில் மதுபானங்கள் விற்பனையினால் 9 நாள்களில் 500 கோடி ரூபா வருவாய்!

இலங்கையில் கடந்த ஒன்பது நாள்களில் மதுபான விற்பனையின் மூலம் மட்டும் 500 கோடி ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

இலங்கை மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் எம்.ஜீ. குணசிறி இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

கடந்த செபடெம்பர் மாதம் 21 ஆம் திகதி முதல் செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் இவ்வாறு மதுபானம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் காரணமாக மூடப்பட்டிருந்த மதுபானசாலைகள் கடந்த 21ஆம் திகதி மீளத் திறக்கப்பட்டன.

இவ்வாறு கிடைக்கப்பெற்றுள்ள 500 கோடி ரூபா வருமானம் உள்நாட்டு மதுபான உற்பத்தி நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் மதுபானங்களின் விற்பனையால் ஈட்டப்பட்ட வருமானம் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் செப்டெம்பர் மாதம் 30ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் நாடு முழுவதிலும் சட்டவிரோத மதுபான உற்பத்தி, விற்பனை தொடர்பில் மேற்கொண்ட சுற்றிவளைப்புக்கள் மூலம் 30,000 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# உலக உளநல ஆரோக்கிய தினத்தை முன்னிட்டு கல்லடி பால வாவியை நீந்திக் கடந்த இளைஞன்

உலக உளநல ஆரோக்கிய தினம் ஒக்ரோபர் 10 ஆம் திகதி (நேற்று ஞாயிற்றுக்கிழமை) அனுஷ்டிக்கப்பட்டது. இத்தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு கல்லடி பாலத்தின் அருகிலுள்ள வாவியை இளைஞர் ஒருவந் நீந்திக் கடக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

மட்டக்களப்பைச் சேர்ந்த 20 வயதுடைய அமலநாதன் சஞ்சீவன் எனும் இளைஞனே இவ்வாறு கல்லடிப் பாலத்தின் மட்டக்களப்பு நகர் பக்கமாக இருந்து கல்லடி பக்கமாக நீந்திச் சென்று உடல் உள ஆரோக்கியம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

மேற்படி இளைஞன் நீந்துவதற்கான நடவடிக்கைக்கு ஆரம்பத்தில் பொலிஸார் அனுமதி மறுக்கப்பட்டதுடன் பின்னர் பாதுகாப்பு உள்ளிட்ட முன்னாயத்தங்களை பரிசீலனை செய்தபின்னர் பொலிஸார் அனுமதித்தனர்.

தற்போதய கொவிட் தொற்று காலத்தில் அனைவரும் உள நலத்தையும் உடல் நலத்தையும் பேணவேண்டும் எனவும், இதுவரை கல்லடி பாலத்தில் சுமார் 30 பேர் குதித்து தற்கொலை செய்துள்ளனர் எனவும் இவ்வாறான தவறான சம்பவங்கள் இனிமேலும் இடம்பெறக் கூடாது எனும் தகவலை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில், இந்த சர்வதேச உள நல ஆரோக்கிய தினத்தில் அனைவருக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவே இந்த நீச்சல் நடவடிக்கையைத் தான் மேற்கொண்டேன் என அமலநாதன் சஞ்சீவன் தெரிவித்தார்.

# புத்தாக்க அரங்க இயக்கத்தின் இணையவழி அரங்க கதையாடல்

புத்தாக்க அரங்க இயக்கம் நடத்தும் இணையவழி பன்னாட்டு அரங்க கதையாடல் 05 நிகழ்வு ஐப்பசி மாதம் 11,12,13,14 ஆகிய திகதிகளில் இரவு 7 .30 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் இன்று (திங்கட்கிழமை) கலாநிதி சுகன்யா அரவிந்தன் சிரேஷ்ட விரிவுரையாளர் இசைத்துறை இராமநாதன் நுன்கலைக்கழகம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (இலங்கை) "நாடக ஆளுமைகளுக்கான இசை அனுபவம்'' என்னும் பொருளிலும் 12.10.2021செவ்வாய்க்கிழமை கலைவளரி ஏ.ஜி.யோகராஜா (சுவிஸ்) எனது ''நாடக எழுத்துருக்களும் நானும் ஓர் அனுபவப்பகிர்வு" என்ற விடயதானத்திலும் 13.10.2021 புதன்கிழமை பேராசிரியர் சி.மௌனகுரு (இலங்கை) 'எனது அரங்கு என்ன அரங்கு' என்னும் தலைப்பிலும் , 14.10.2021 வியாழக்கிழமை இரா.சிலம்பரசன் (தமிழ் நாடு இந்தியா) 'தமிழகத்தில் தெருக்கூத்து மரபுகள்' ஆகிய விடயங்களில் கதையாடவுள்ளார்.

ஏற்புரையை புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.ரி.அருள்குமரன் வழங்கவுள்ளார்.

இந்த இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 647334 8261கடவுச் சொல் itm ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

# இரு குழுக்களுக்கிடையில் வாள்வெட்டு; மூவர் காயம்

திருகோணமலை – நொச்சிக்குளம் பகுதியில் இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பில் மூவர் வாள் வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் கடந்த சனிக்கிழமை சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு வாள்வெட்டுக்கு இலக்கானவர்கள் திருகோணமலை, சாந்திபுரம் பகுதியைச் சேர்ந்த பாக்கியராசா விஜயகுமார் (வயது – 39) அவரது மகனான விஜயகுமார் பிரதாப் (வயது – 20) மற்றும் நொச்சிகுளம் பகுதியைச் சேர்ந்த எஸ்.டக்ஸன் (வயது – 20) எனவும் தெரியவருகின்றது.

சாந்திபுரம் துர்க்கை அம்மன் ஆலயத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் இரு குழுக்களுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், சனிக்கிழமை மாலை அப்பகுதிக்கு சென்ற குழுவினர் மற்றைய குழுவினரை வாளால் வெட்டினர் எனவும், வாள்வெட்டில் மூவர் படுகாயம் அடைந்த நிலையில் மஹதிவுல்வெள பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர் எனவும் வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்துள்ளார்.

குறித்த வாள் வெட்டு தாக்குதலுக்கு இலக்காகிய மூவரில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும், மேற்படி நபரை சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், வாள்வெட்டுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் தலைமறைவாகியுள்ள நிலையில் மொரவெள பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு 3 பிரிவுகளின் கீழ் முத்திரை வெளியீடு

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு மூன்று பிரிவுகளின் கீழ் முத்திரைகளை வெளியிடும் நிகழ்வு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நேற்றுமுன்தினம் (சனிக்கிழமை) அலரி மாளிகையில் இடம்பெற்றது.

உலக அஞ்சல் தின முத்திரை, நிரந்தரப் பிரிவின் கீழ் 1,000 ரூபா பெறுமதியான முத்திரை மற்றும் இலங்கையின் உள்ளூர் பறவைகளை உள்ளடக்கும் வகையிலான முத்திரை தொகுப்பும் வெளியிடப்பட்டது.

வெகுசன ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும அதற்கான முதல் நாள் உறை மற்றும் முத்திரையை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் வழங்கினார்.

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்ட உலக அஞ்சல் தின நினைவு முத்திரை -2021, கொவிட் 19 தொற்று நிலைமைக்கு மத்தியிலும் நமது நாட்டு தபால் சேவை சர்வதேச ரீதியில் செயற்பட்டு வருகின்றமையை பிரதிபலிக்கும் வகையில் புலஸ்தி எதிரிவீரவால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

1,000 ரூபா பெறுமதியான நிரந்தர வகை முத்திரை யாபஹுவ சிங்கத்தை பிரதிபலிக்கும் வகையிலான கைகளினால் வரையப்பட்ட கிராபிக் ஓவியமாகும். இசுறு சதுரங்கவால் இந்த முத்திரை வடிவமைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இதுவரை முத்திரைகளின் ஊடாகப் பிரதிபலிக்கப்படாத உள்ளூர் பறவைகளை சித்திரிக்கும் வகையிலான 6 முத்திரைகளும், ஆறு முதல் நாள் உறைகளும் இவ்வாறு வெளியிடப்பட்ட முத்திரைகளில் உள்ளடங்குகின்றன.

சாம்பல் இருவாய்ச்சி (அலு கேதைன்னா), ஹீன் கொட்டோருவா, வன கொவுலஸ்பெடியா, புள்ளிவல் அவிச்சியா, பெரிய பொன்முதுகு மரங்கொத்தி (மஹ ரது கெரலா) மற்றும் பட ரது வெஹிலிஹினியா ஆகிய உள்ளூர் பறவைகள் இம்முத்திரைகளில் சித்திரிக்கப்பட்டுள்ளன. புலஸ்தி எதிரிவீரவால் இம்முத்திரை தொகுதி வடிவமைக்கப்பட்டுள்ளது.

# யானை முத்துக்களுடன் வவுனியாவில் மூவர் கைது

வவுனியாவில் யானை முத்துக்களுடன் சந்தேகநபர் மூவரை, முல்லைத்தீவு விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

முல்லைத்தீவு விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வவுனியா நகரில் யானை முத்துக்களை விற்பனை செய்யும் நோக்குடன் வந்த மூவரை கைதுசெய்தமையுடன், அவர்களிடம் இருந்து நான்கு யானை முத்துக்களும் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்கள் குருணாகல், மாகாவ மற்றும் நிக்கவரெட்டிய பிரதேசங்களைச் சேர்ந்த 53, 30 மற்றும் 29 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், கைது செய்யப்பட்டவர்கள் மற்றும் அவர்களிடம் இருந்து மீட்கப்பட்ட யானை முத்துக்கள் நான்கும், வவுனியா பொலிஸாரிடம் முல்லைத்தீவு விசேட அதிரடிப்படையினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# உணவகங்களிலும் விலைகள் எகிறலாம்?

சமையல் எரிவாயுவின் விலை அதிகரித்துள்ளதால், வெதுப்பக உணவுகள், தேநீர், பால் தேநீர் போன்றவற்றின் விலைகளும் அதிகரிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றின் விலை சுமார் 20 வீதத்தால் அதிகரிக்கப்படலாம் என உணவக உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனடிப்படையில் வெறும் தேநீர் 25 ரூபா வரையும், பால் தேநீர் 60 ரூபாவாகவும், பணிஸ் ஒன்றின் விலை 50 ரூபாவாகவும், ரோஸ் பாண் ஒன்றின் விலை 30 ரூபாவாகவும் அதிகரிக்கலாம் என உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

# நீச்சல் தடாகத்தில் நீராடிய 6 வயது சிறுமி நீரில்மூழ்கி சாவு

மட்டக்களப்பு – வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பாசிக்குடா சுற்றுலா விடுதியின் நீச்சல் தடாகத்தில் நீராடிக்கொண்டிருந்த ஆறு வயது சிறுமியொருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ள சம்பவமொன்று கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ளதாக கல்குடா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கண்டி – அலவத்கொட பகுதியைச் சேர்ந்த குடும்பத்தினர் பாசிக்குடாவிலுள்ள சுற்றுலா விடுதி ஒன்றில் தங்கியிருந்த நிலையில் நீச்சல் தடாகத்தில் நீராடிக்கொண்டிருக்கும் போது முஹம்மட் சியாம் பாத்திமா செய்னப் எனும் ஆறு வயதுடைய சிறுமியே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் திடீர் மரண விசாரணை அதிகாரி வி.ரமேஸ் ஆனந்த் விசாரணைகளை மேற்கொண்டதுடன், நீரில் மூழ்கியதால் மூச்சு திணறல் காரணமாக ஏற்பட்ட விபத்து மரணமென்று தீர்ப்பு வழங்கி மருத்துவ விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் சடலத்தை ஒப்படைக்குமாறு தீர்ப்பளித்துள்ளார்.

வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் குளிரூட்டி பழுதடைந்த நிலைமை காரணமாக பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்வதற்காக சிறுமியின் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நாடாளுமன்றத்துக்கு அருகில் முதலை ஒருவரை இழுத்தது!

தியவன்னா ஓயாவில், நபர் ஒருவரின் உடலை முதலை இழுத்துச் சென்ற காட்சிகள் கையடக்க தொலைபேசியில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை மாலை 5.45 மணியளவில் ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டேயில் நாடாளுமன்றத்துக்கு அருகில் உள்ள கிம்புலாவாலா பகுதியில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

சம்பவத்தை பதிவு செய்த இளைஞன், முதலை உடலை பாலத்தை நோக்கி இழுத்து பின்னர் பாலத்தின் கீழ் விட்டுச்சென்றதாக கூறியுள்ளார். பின்னர் கிம்புலாவாலா பாலம் அருகே வைத்து கடற்படை அதிகாரிகள் உடலை மீட்டுள்ளனர்.

சனிக்கிழமை இரவு 9 மணியளவில் நீதிவான் விசாரணை நடத்தப்பட்டதுடன், உடல் மேலதிக பரிசோதனைகளுக்காக களுபோவில வைத்தியசாலைக்கு சடலம் கொண்டு செல்லப்பட்டது.

பலியானவர் 60 வயது முதியவர் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக மிரிஹானா பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர், உயிரிழந்தவர் யார் என்பது இன்னும் உறுதி செய்யப்படவில்லை.



# மேலும் 115 பேர் சிக்கினர்

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 115 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியைப் பேணாமை ஆகிய குற்றச்சாட்டுகளுக்கு அமைய இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி, கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் தொடக்கம் இதுவரையான காலப்பகுதியில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் இதுவரை 80 ஆயிரத்து 475 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் தலைமையகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# சினிமாப் பாணியில் மன்னாரில் பொலிஸ் நிலையம் முன் விபத்து

## ஐவர் வைத்தியசாலையில்

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தோட்டக்காட்டு பகுதியில் சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற மோதல் சம்பவத்தை தொடர்ந்து நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை மன்னார் பொலிஸ் நிலையத்தில் சரணடையச் சென்றவர்கள் மீது மன்னார் பொலிஸ் நிலைய நுழைவாயிலில் வைத்து டிப்பர் வாகனத்தால் மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

குறித்த டிப்பர் வாகனம் மோதியதில் மன்னார் பொலிஸ் நிலைய நுழைவாயிலில் நின்ற 5 பேர் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேற்படி விபத்து திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் விபத்து பொலிஸ் நிலையத்துக்கு முன்பாகவே இடம் பெற்றுள்ளமை பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மன்னார் பொலிஸ் நிலையத்தில் நேற்று காலை 10 மணியளவில் சரணடையச் சென்ற இளைஞர்களே மேற்படி விபத்தில் சிக்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சில தினங்களுக்கு முன்னதாக இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் மேற்படி இளைஞர்கள் பொலிஸில் முறைப்பாடு மேற்கொண்டு சரணடையச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்தை ஏற்படுத்திய டிப்பர் மற்றும் சாரதி தப்பிச் சென்றுள்ள நிலையில் டிப்பர் மற்றும் சாரதியை தேடும் பணி மன்னார் பொலிஸாரால் இடம்பெற்று வருகின்றது.

இந்த விபத்து நன்கு திட்டமிடப்பட்ட விபத்து எனவும் விபத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் பண பலத்தைப் பயன்படுத்தி விபத்துக்கான காரணத்தை திசை திருப்புவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றமையால் பொலிஸார் உரிய விதத்தில் விசாரணையை மேற்கொண்டு நீதியை பெற்றுத் தர வேண்டும் என பாதிக்கப்பட்ட தரப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொலிஸ் நிலையத்துக்கு முன்பாகவே முறைப்பாடு செய்து சரணடையச் சென்றவர்கள் மீது சினிமா பாணியில் விபத்தை ஏற்படுத்திய சம்பவம் மன்னார் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

# ஜனாதிபதியுடனான கலந்துரையாடலில் விவசாயிகளின் பிரச்சினைகளும் ஆய்வு

## சஜித் திட்டவட்டம்



விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் பேச்சு நடத்தவுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

விவசாயிகளின் உரிமைகளுக்காக எதிர்க்கட்சிகள் தொடர்ந்து போராடும் என்றும் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

முறையான செயல்முறையைப் பின்பற்றி இயற்கை உரத்தை பயன்படுத்தி விவசாயம் செய்ய வேண்டும் என்றும் அவர் கூறினார்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 157

**நேற்று இக்கட்டுரைத் தொடரில் வந்த ஒரு கேள்வி பகுதியின் ஒரு பகுதியை இன்று மீளப் பிரசுரிக்கின்றோம்.**

**அந்தப் பகுதியில் இப்படத்தை ஒட்டிய ஒரு கடிதம் இணைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது ஆனால் நேற்றைய பிரசுரத்தில் அது இணைக்கப்படாமல் தவறிவிட்டது.**

**அதன் காரணமாக அந்தக் கேள்வியும் அதன் ஒரு பகுதியும், அந்தப் படமும் இன்று இங்கு பிரசுரமாகின்றன.**

**நாளை கட்டுரைத் தொடர் வழமைபோல தொடர்ந்து வெளியாகும்.**

**(ஆ-ர்)**

**406. பின்னர் ஏதும் பேசக்கூடியதாக இருந்ததா?**

1983 இன் கலவரங்கள் புலம்பெயரிலும் தமிழீழம் அமைத்தே ஆக வேண்டும் என்ற வெறியை ஆரம்பமாக்கியிருந்தது. அங்கிருந்தும் பலர் விடுதலை குழுக்களுக்கு ஆதரவாக புறப்பட்டு வந்தனர். அமிர்தலிங்கமும் கூட்டணியினரும் கூட அகதிகளாக தமிழ் நாடு சேர வேண்டிய கட்டம் வந்தது.

அவற்றை சாதகமாக, பாவிக்க, இந்திரா காந்தி அமிர்தலிங்கத்திற்கு தந்த அனுசரணையில், நியூ யோர்க்கில் முன்னர் கூடி தமிழீழம் நிறுவுவதற்காக அமைக்கப்பட்ட தமிழீழ விடுதலை சபை, தொடர்ந்து கொண்டிருந்த முயற்சிகளால், அரசியல் கட்சிகள், புலம் பெயர் அமைப்புக்கள், விடுதலைக் குழுக்கள் எல்லோரையும் இணைத்து, ஒரு பொதுக்கட்டமைப்பில் தமிழீழம் நோக்கி போகவிரும்பினர்.

இதற்காக, முன்னையது போன்ற சம்மேளனத்தை திரும்பவும் நடத்த, டாக்டர் பஞ்சாட்சரம், சிறீதரன் போன்றோர், பலருடன், பிரபாகரன் உட்பட, பேசினார்கள்.



நாங்கள் கூட நாட்டிலும், லண்டனிலும், சென்னையிலும் விடுதலைப் புலிகளோடு தனிப்பட்ட முறையில் பேசினோம்.


அந்த சமயத்தில் இந்திரா காந்தியின் முன்னெடுப்பில், சர்வ கட்சிகள் வட்டமேசை மாநாட்டை ஜே.ஆர். நடாத்தி கொண்டிருந்தார்.

பிரபாகரனோ, ஈழத்தமிழரை தற்பொழுது பிரதிபலிக்கும் அரசியல் சக்தி, தமிழீழ விடுதலைப் போராளிகளே, அவர்கள் தான் அவர்களின் தலைவர்கள் என அறிக்கைகள் தந்தும் 19 மே 1984 அன்று டாக்டர் பஞ்சாட்சரத்திற்கு அவைபற்றி கடிதம் ஒன்றை எழுதினார். அவர் அதில் விடுதலைக்கான எந்த ஒற்றுமையும் நாட்டில் விடுதலைப்போராட்ட குழுக்களுக்கிடையேதான் ஏற்பட வேண்டும். தமிழீழக் களத்தில் இருந்து தான் அதனை அவர்கள் பேச வேண்டும் என்றும் என்னுடன் பேசியவாறு, நிதிப்பற்றாக்குறையை சொல்லி தமிழீழ தேசிய இராணுவம் அமைக்க உதவிகள் செய்யுமாறு கேட்டார். அந்தக் கடிதத்தின் முழுச்சாரத்தையும் இணைத்துள்ளேன்.

அதன் பின் நடந்தவற்றையும் தலைமை பதவிகளுக்காக நடைபெற்ற அழிப்பு அட்டூழியங்களையும் 'இந்திய ஒப்பந்தம் – ஒரு திசைநோக்கு' என்ற தொடரில் விவரித்திருந்ததால் அவற்றுக்கு மீளப்போக வேண்டிய தேவையில்லை.

அவற்றிலிருந்து தொடர்ந்தவை, படிப்படியாக தமிழ் மக்களை, முள்ளிவாய்க்காலில் கொண்டு வந்து நிறுத்தி, ஸ்ரீலங்கா அரசு மக்களைப் பாதுகாக்கும் கடமை ஒரு நாட்டின் அரசாக தங்களுக்கு உண்டு என்று செய்த அட்டூழியங்கள் எல்லாம் நடந்தேறின.

(வளரும்...)



நியூயார்க் மாநாடு: பிரபாவின் கடிதம்

19. 05. 84.
தமிழ் ஈழம்.

அன்பின் டாக்டர் பஞ்சாட்சரம் அவர்களுக்கு,

உங்களது அன்பான கடிதம் கிடைக்கப்பெற்றேன். மிகவும் நன்றி. பதில் எழுத தாமதமாகியதற்கு மன்னிக்கவும். வேலைப் பளு காரணம். தமிழீழம் என்ற இலட்சியத்திற்காக தாங்கள் ஆற்றிவரும் தன்னலமற்ற சேவையை நான் நன்கு அறிவேன். அமெரிக்காவில் வதியும் தமிழர்கள் அந்நிய கலாச்சாரத்தால் ஆக்கிரமிக்கப்படுவதைத் தடுத்து, தமிழ்த் தேசாபிமான உணர்வைத் தட்டியெழுப்பி, ஈழத் தமிழினத்திற்குத் தனியரசே இறுதியான தீர்வு என்பதில் உறுதியாக நின்று நீங்கள் செய்து வரும் தொண்டை நான் பாராட்டுகிறேன்.

[illegible] உலகத் தமிழீழ மகாநாட்டை கூட்டுவதற்கு நீங்கள் இப்பொழுது முயற்சி [illegible] வருகிறீர்கள். எமது விடுதலை [illegible] இம் மாநாட்டில் பங்குபற்று [illegible] திருக்கிறீர்கள். இவ்விசயத்தில் எமது இயக்க நிலைப்பாட்டையும், தமிழினத்தின் தற்போதைய [illegible] வரத்தையும், எமது விடுதலையை முன்னெடுப்பதற்கான இன்றைய தேவைகளையும் நான் உங்களுக்கு எடுத்து விளக்குவது அவசியமாகிறது.

தமிழீழத்தில் இன்று இராணுவ அராஜகம் தலைவிரித்தாடுகிறது. தமிழீழப் பகுதிகளில் சிங்கள ஆயுதப்படைகள் சதா குவிக்கப்படுகின்றன. நவீனரகமான ஆயுத தளபாடங்களும் புகுத்தப்படுகின்றன. கடலாலும் நிலத்தாலும் தமிழீழம் முற்றுகையிடப்பட்டிருக்கிறது. பாதுகாப்பற்ற சூழ்நிலையில் தமிழ் மக்கள் பயந்து வாழ்கிறார்கள். இராணுவ அட்டூழியங்கள் நாளுக்கு நாள் அதிகரித்தவண்ணம் இருக்கிறது. இதுதான் இன்றைய நிலை. இந்நிலையில் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பதாயின் ஒரு பலம் வாய்ந்த இராணுவ அமைப்பை நாம் கட்டி எழுப்பவேண்டும். தமிழீழ விடுதலைக்கு இன்று அத்தியாவசியமான தேவை இதுவாகும். இந்த இலக்கில்தான் எமது முழு முயற்சியும் இன்று பிரயோகிக்கப்படுகிறது. இந்த இலக்கை நாம் அடைவதற்கு வெளிநாடுகளில் வதியும் தமிழீழ தேசபக்தர்களின் உதவியும் ஒத்தாசையும் இன்றியமையாதது. இந்த வகையில் நீங்களும் எமக்கு உதவி செய்ய முன்வரவேண்டும்.

தமிழீழத்தில் எமது கெரில்லா அணிகளை விஸ்தரித்து, பலப்படுத்தும் முக்கிய வேலைகளில் நான் ஈடுபட்டிருக்கிறேன். நான் தளத்தைவிட்டு எக்காரணத்தைக்கொண்டும் வெளிநாடுகளுக்கு பயணம் செல்ல முடியாது. இயக்கத்தின் ஏனைய முக்கிய உறுப்பினர்களின் நிலையும் அதுவே. ஆகையால், இயக்கத்தின் அதிகாரபூர்வமான பிரதிநிதி எவரையும் உங்களது மாநாட்டிற்கு அனுப்ப முடியாத நிலையில் இருக்கிறேன். இதனை நீங்கள் புரிந்து கொள்வீர்களென நினைக்கிறேன்.

விடுதலை இயக்கங்களை ஒன்றிணைத்து ஒரு தேசிய அரசியல் இராணுவத் தலைமையை உருவாக்குவது மாநாட்டின் நோக்கங்களில் ஒன்று என்பதாகத் தெரிகிறது. இவ்வித ஒற்றுமை முயற்சிகளை நான் வரவேற்கிறேன். எனினும் இந்த முயற்சிகள் தமிழீழத்தில் மேற்கொள்ளப்படுவதையே நான் விரும்புகிறேன். தமிழ் நாட்டில் நிரந்தரமாக நிலைகொண்டுள்ள விடுதலைக் குழுக்களும் அதன் தலைமைகளும் தமிழீழம் வந்தாகவேண்டும். தமிழீழப் போராட்டக் களத்திலிருந்து ஒற்றுமைபற்றி பேசுவதற்கு நாம் தயார். ஆனால் அந்நிய நாடு ஒன்றில், அதுவும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைநகரில், சி. ஐ. ஏ. உளவு ஸ்தாபனத்தின் சிலந்தி வலைக்குள் இருந்து எமது போர்முறைத் திட்டங்கள் பற்றி பேசுவதற்கு நாம் தயாரில்லை. விடுதலை இயக்கங்கள் மத்தியில் சோசலிசத் தமிழீழம் என்ற இலட்சியத்தில் ஒருமைப்பாடு உண்டு என்பது நீங்கள் அறியாததல்ல. எனினும் இந்த இலட்சியத்தை அடைவதற்கான போருபாயங்களிலும், பொதுவான போர்முறைத் திட்டத்திலும் கருத்துவேறுபாடுகள் உண்டு. இது மிகவும் சிக்கலான விவகாரம். போர் நுட்பமும், போர் அனுபவமும் சார்ந்த விசயம். இயக்கத் தலைமைகள் மிகவும் இரகசியமாக, பரஸ்பர நம்பிக்கையுடன் பரிமாறிக்கொள்ள வேண்டியது. இவற்றை எல்லாம் சர்வதேச மகாநாடுகளில், அதுவும் அமெரிக்காவில், திறந்த அரங்குகளில் விவாதிக்க முடியாது.

தமிழீழ விடுதலைப் போராட்டம் வெற்றி பெறுவதாயின் மிகவும் கட்டுப்பாடுடைய தேசிய இராணுவ அமைப்பு ஒன்றை முதலில் கட்டி எழுப்ப வேண்டும். இதனையே நாம் இன்று செயற்படுத்தி வருகிறோம். ஏனைய விடுதலை அணிகளும் எம்மோடு இணைந்து செயற்படும் காலம் வெகுதூரத்திலில்லை. போராட்ட சூழ்நிலைகள் இந்த ஒற்றுமையை பிறப்பிக்கும். விடுதலை அமைப்புக்கள் மட்டுமன்றி வெகுசனங்களுமே போராட்டத்தில் நேரடியாக குதிக்க வேண்டி நேரிடும்.

எமது விடுதலை இயக்கம் ஒரு தேசியப் பாதுகாப்பு நிதியை ஆரம்பித்திருக்கின்றது. இது பற்றிய எனது விபரமான அறிக்கை எமது இயக்கப் பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது. அதனை உங்களுக்கு அனுப்பி வைக்கிறேன். இந்நிதிக்கு அமெரிக்காவிலுள்ள தமிழீழ விடுதலை விரும்பிகள் தம்மாலான நிதி உதவியை செய்யுமாறு அன்புடன் வேண்டுகிறேன். யுத்த காலத்தில் மக்களின் பாதுகாப்பு திட்டமொன்றை செயற்படுத்தவே இந்நிதிதேவையாகிறது. இன்று நாம் ஒரு தேசிய விடுதலை யுத்தத்திற்கு தயாராகிவருகிறோம். இந்த யுத்தத்திற்கு வெளிநாட்டுத் தமிழரின் நிதி உதவி அத்தியாவசியம். தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு அவர்கள் செய்யகூடிய அளப்பரிய சேவையும் அதுவே. இதைவிடுத்து, ஆடம்பரமான மகாநாடுகளை நடத்தி அநியாயமாகப்பணம் செலவு செய்யப்படுவதை இந்நெருக்கடியான கால கட்டத்தில் நாம் தவிர்த்துக்கொள்ள வேண்டும். அதற்குப் பதில் இப் பணம் விடுதலைப் போராளிகளின் கையில் ஆயுதங்களாக திகழ வேண்டும். அதுவே எமது வெற்றியை ஊர்ஜிதப்படுத்தும்.

அன்பு வணக்கம் கூறி முடிக்கிறேன்.
புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்.

இங்ஙனம்,
வே. பிரபாகரன்
தலைவர், இராணுவத் தளபதி,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

# மாகாணத் தேர்தல் உடன்பாடு ஒரு தற்காலிகமான ஏற்பாடு!

## இப்படிக் கூறுகின்றார் மனோ கணேசன்

தேர்தல் முறை தற்போது பேசப்படும் ஒரு தலைப்பு. மாகாண சபைத் தேர்தலை விகிதாசார முறையில் நடத்த இப்போது அரசு இணங்கியுள்ளது. மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற உள்நாட்டு, வெளிநாட்டு அழுத்தங்கள் அரசாங்கத்தின் மீது ஏற்பட்டன. அதற்காக விகிதாசார முறையை மாற்றி கலப்பு முறையில் தேர்தல் நடத்த முடியாது. கலப்பு முறைக்கு போனால், எல்லை மீள் நிர்ணயம் செய்யப்பட வேண்டும். இது நீண்ட காலம் எடுக்கும் பணியாகும்.

இந்த கால தாமதத்துக்கு முகம் கொடுக்க முடியாததாலேயே, இப்போது பழைய முறையில் தேர்தல்கள் நடத்தப்படலாம் என்ற உடன்பாடு அரசு –எதிரணி மத்தியில் ஏற்பட்டுள்ளது. இது இடைக்கால உடன்பாடாகும். எனவே தேர்தல் முறைமை சீர்திருத்தப் பணிகள் தொடரும். அடுத்த தெரிவுக்குழு கூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் மனோ எம்.பி. மேலும் கூறியுள்ளவை வருமாறு –

தேர்தல் முறை தற்போது பேசப்படும் ஒரு தலைப்பு. மாகாண சபைத் தேர்தலை விகிதா சார முறையில் நடத்த இப்போது அரசு இணங்கியுள்ளது. இப்போது தேர்தல் முறையை மாற்றப் போனால் பெரும் தாமதம் ஏற்படும். இதில் நாம் உறுதியாக இருந்தோம். ஆகவே, தெரிவுக்குழுவில், அரசு – எதிரணி மத்தியில் உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

இதற்குக் காரணம் அரசாங்கத்தின் மீதான உள்நாட்டு, சர்வதேச அழுத்தங்கள் ஆகும். ஆகவே இது இடைக்கால உடன்பாடுதான். ஆகவே, தேர்தல் உள்ளூராட்சி, மாகாண சபை, நாடாளுமன்றம் ஆகியவற்றுக்கான தேர்தல் முறைமைகள் பற்றிய அவதானம் தொடர்ந்து தேவை.

'விகிதாசார முறைமை வேண்டாம்', 'தொகுதி முறையே வேண்டும்' என தெரிவுக்குழுவில் பெரும்பான்மை, குறிப்பாக அரசாங்க கட்சி அரசியல்வாதிகள் கூப்பாடு போட்டார்கள். அது இந்நாட்டில் சிதறி வாழும் தமிழ், முஸ்லிம் மக்களின் நாடாளுமன்ற, மாகாணசபை பிரதிநிதித்துவங்களை அபாயத்துக்குள் தள்ளும் நோக்கத்தைக் கொண்டதால், நாம் இந் நிலைப்பாட்டை எதிர்த்தோம்.

விகிதாசார முறைமை மாற்றப்படக்கூடாது என்ற தமிழ், முஸ்லிம் கட்சிகளின் நிலைப்பாட்டுக்கு ஐக்கிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வீ.பி.) உட்பட்ட பெரும்பான்மைக் கட்சிகளும் ஆதரவளித்தன.

அதேவேளை அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளான சிறிலங்கா சுதந்திரக்கட்சி உட்பட்ட பல கட்சிகளின் தலைவர்களுடனும் நான் இது தொடர்பில் பேச்சுகள் நடத்தி இருந்தேன். அவர்களும் அரசாங்கத்துக்கு உள்ளே அழுத்தங்களைப் பிரயோகித்தார்கள்.

நாடாளுமன்றமும், மாகாண சபைகளும் தேசிய, மாகாண சட்டமூலங்களை விவாதிக்கும் நிறுவனங்களாகும். ஆகவே இங்கே உள்ளூர் தேர்தல் தொகுதிகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் உறுப்பினர்களின் அவசியம் கிடையாது.

ஆனால், நீர், மின்சாரம், வீதிகள் உட்பட மக்களின் நாளாந்த விவகாரங்களைக் கையாளும் உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற வட்டார உறுப்பினர்களாக இருக்கலாம். உள்ளூராட்சி மன்றங்களில், அந்தந்த மன்றங்களின் வட்டாரங்களுக்குப் பொறுப்புக் கூறக்கூடிய உறுப்பினர்களுக்கான அவசியம் இருக்கின்றது.

ஆகவே நாடாளுமன்றம், மாகாண சபைகளுக்குத் தொகுதி முறை தேவையில்லை என நாம் கூறினோம். உள்ளூராட்சி மன்றங்களுக்கு வட்டார உறுப்பினர்கள் இருக்கலாம் எனவும் நாம் கூறினோம்.

அதேபோல்தான், விருப்பு வாக்கு என்பது ஜனநாயகத்தின் உச்சக் கட்டம். கட்சிக்கு வாக்களிக்கும் ஒரு வாக்காளர், அந்த கட்சி தலைமை முன் நிறுத்தும் வேட்பாளருக்கு மட்டும்தான் வாக்களிக்க வேண்டும் என்ற கட்டாயத்தில் இருந்து, விருப்பு வாக்கு மூலம் தப்புகிறார்.

கட்சிக்கு வாக்களிக்கும் அதேவேளை, தனக்கு பிடித்த வேட்பாளரைத் தெரிவு செய்ய ஒவ்வொரு வாக்காளருக்கும் 'ஜனநாயக சுதந்திரத்தை', விருப்பு வாக்கு வழங்குகிறது. இதை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

'விருப்பு வாக்கு வேண்டாம்', 'விகிதாசார முறைமை வேண்டாம்', 'தொகுதி முறைக்கு போவோம்' என்ற கோஷங்கள் பெரும்பான்மை இன பெரிய கட்சிகளின் கோஷங்கள்தான். அதேவேளை தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகள் சிலர் கூட, இவை பற்றிய தெளிவு இல்லாமல், 'விருப்பு வாக்கு வேண்டாம்', 'தொகுதி முறைக்கு போவோம்' என்ற கோஷங்களை ஆங்காங்கே எழுப்பினார்கள். இது முதிர்ச்சியற்ற பிழையாகும். தேர்தல் முறை விவாதம் தொடரும். இவை பற்றிய அவதானத்துடன் தமிழ், முஸ்லிம் கட்சிகள் செயற்பட வேண்டும்.

# வைத்தியர்களின் ஓய்வு வயது 63! வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது

அரசாங்கம் பதிவு செய்த வைத்தியர்களின் ஓய்வு பெறும் வயதை 63 ஆக நிர்ணயித்து அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோனின் கையொப்பத்துடன் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் ஓகஸ்ட் 2 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

# மூன்று கோடி ரூபா பணத்தை பிக்கு வழங்க நிராகரித்தேன்

## சந்திரிக்காவின் நெகிழ்ச்சியான பதிவு



ஜனாதிபதியாக தான் ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த போது, அங்கு வசித்து வரும் பிக்கு ஒருவர் தனக்கு மூன்று கோடி ரூபா பணத்தைக் கொடுத்தார் எனவும், அதனை தாம் மிக மரியாதையுடன் நிராகரித்தேன் எனவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

தனது கணவரும் இலங்கை மக்கள் கட்சியின் தலைவரும், நடிகருமான விஜயகுமாரதுங்கவின் பிறந்த தினத்தை முன்னிட்டு சமூக வலைத்தள பக்கத்தில் இட்டுள்ள பதிவில் முன்னாள் ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார்.

நான் ஜனாதிபதியாகப் பதவி வகிக்கும் போது ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்தேன். அங்கு என்னைச் சந்திக்க வந்திருந்த மகாயான பௌத்த பிக்கு ஒருவர் சந்திப்பின் இறுதியில் மூன்று கோடி ரூபா இலங்கை ரூபாவை வழங்குகிறேன் என என்னிடம் பொதி ஒன்றை வழங்கினார்.

நான் அந்தப் பரிசை மிக மரியாதையுடன் நிராகரித்தேன். அப்போது அந்த பிக்கு அவமகிழ்ச்சிக்கு உள்ளானார். இந்த நிலைமையைப் புரிந்துக்கொண்ட அருகில் இருந்த பிரதியமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, இந்தப் பணத்தில் விஜயகுமாரதுங்கவின் ஊரில் அவரது பெயரில் வைத்தியசாலை ஒன்றை நிர்மாணிக்கலாம் என யோசனை முன்வைத்தார்.

சீதுவை விஜயகுமாரதுங்க வைத்தியசாலையின் கடந்த கால கதை இதுதான். தற்போது நான் எனது நேரத்தில் குறிப்பிடத்தக்களவு காலத்தை அந்த வைத்தியசாலையின் முன்னேற்றத்துக்காகச் செலவிட்டு வருகின்றேன்.

விஜயகுமாரதுங்கவுக்கு செய்யும் பலனுள்ள புண்ணிய கர்மம் எனக் கருதி எதிர்காலத்திலும் அந்த வைத்தியசாலையின் நலன்களுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவேன். 'விஜய உங்களுக்கு பிறந்த நாள் நல்வாழ்த்துகள்!' என முன்னாள் ஜனாதிபதி தனது சமூக வலைத்தள பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டை விட்டு வெளியேறுவதற்கு இளைஞர், யுவதிகள் வரிசையில்!

## அலவத்துவல எம்.பி. வேதனை



நாட்டில் பெரும் எண்ணிக்கையிலான இளைஞர், யுவதிகள் நாட்டை விட்டு வெளியேறும் வரிசையில் நிற்கின்றனர் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சீ.அலவத்துவல தெரிவித்துள்ளார்.

ஊடக சந்திப்பு ஒன்றில் அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தை ஆட்சிப் பீடம் ஏற்றுவதற்காக வீதிகளிலும் மதில் சுவர்களிலும் ஓவியம் வரைந்த இளைஞர், யுவதிகளுக்கு இன்று நாட்டில் வாழ்வதை வெறுக்கின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக குருணாகல், கொழும்பு உள்ளிட்ட உள்ளிட்ட குடிவரவு குடியகல்வுத் திணைக்களக் காரியாலயங்களில் கடவுச்சீட்டு பெற்றுக் கொள்ள இளைஞர் மற்றும் யுவதிகள் நீண்ட வரிசையில் காத்திருக்கின்றனர் எனத் தெரிவித்துள்ளார்.

இலங்கை ரூபாவை அதிகளவில் அச்சிடுவதால் அமெரிக்க டொலரின் பெறுமதி மேலும் மேலும் அதிகரிக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்து பணவீக்கம் ஏற்படும் மக்கள் எவ்வளவு தொகையையும் ரூபாவால் உழைத்தாலும் பொருள்களைக் கொள்வனவு செய்யும் போது சிரமங்கள் ஏற்படும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கையின்றி இளைஞர், யுவதிகள் வெளிநாடு செல்ல கடவுச்சீட்டு பெற்றுக்கொள்கின்றார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

# எவரையும் பாதுகாக்க வேண்டிய தேவை அரசுக்குக் கிடையாதாம்

## சீ.பீ.ரத்னாயக்க தெரிவிப்பு

பண்டோரா ஆவணத்தின் நோக்கம் டயஸ்போராவின் நோக்கமாக இருக்கலாம். ஆகவே இந்த விடயம் தொடர்பாக விசாரணை நடத்தப்படும் என அமைச்சர் சீ.பீ.ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

நுவரெலியா- கொத்மலை, இறம்பொடையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் சீ.பீ.ரத்னாயக்க மேலும் கூறியுள்ளவை வருமாறு -

பண்டோரா ஆவணத்தில் பெயரிடப்பட்டுள்ள இலங்கையர்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக ஜனாதிபதி குழுவொன்றை அமைத்துள்ளார்.

குறித்த குழுவின் அறிக்கை வெளிவந்த பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும். எவரையும் பாதுகாக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு ஒருபோதும் கிடையாது. பண்டோராவின் நோக்கம் டயஸ் போராவின் நோக்கமெனின் அதனையும் நாட்டுக்கு வெளிப்படுத்துவோம். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 60 இற்கும் மேற்பட்ட இலங்கையர்களினுடைய பல பில்லியன் பணம் வெளிநாட்டு வங்கிகளில்!

60 இறகும் மேற்பட்ட இலங்கையர்கள் பல பில்லியன் பணத்தை வெளிநாட்டு வங்கிகளில் வைப்புச் செய்துள்ளனர் எனத் தெரியவருகின்றது.

இவர்களில் 20 இற்கும் மேற்பட்டவர்கள் அரசியல்வாதிகள் என அமெரிக்காவில் வெளியாகும் சஞ்சிகை ஒன்று உறுதிப்படுத்தியுள்ளது.

அத்துடன் சட்டரீதியான மற்றும் சட்டத்துக்கு முரணான வர்த்தகங்களில் ஈடுபடும் நபர்களும் இதில் அடங்குகின்றனர் எனவும் கூறப்படுகின்றது.

அண்மையில் பன்டோரா ஆவணங்கள் வெளியிடப்பட்டதை அடுத்து, இவர்களில் பெரும்பாலானவர்கள் கடும் பதற்றத்துக்கு உள்ளாகி இருக்கின்றனர் எனத் தெரியவந்துள்ளது என சிங்கள இணையத்தளம் ஒன்று கூறியுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# கொவிட்டிலிருந்து குணமடைந்த பின் கர்ப்பிணிகளுக்கு நோய் அறிகுறிகள்!

## விசேட வைத்திய நிபுணர் சனத் லெனரோல் தகவல்

கொரோனாத் தொற்றுறுதியான கர்ப்பிணிகள் தொற்றிலிருந்து குணமடைந்து சுமார் 4 வாரங்களின் பின்னர் சுவாசிப்பதில் சிரமம் போன்ற அறிகுறிகள் ஏற்படுகின்றன.

இவை தொடர்பில் பிரசவம் மற்றும் நரம்பியல் தொடர்பான வைத்தியர்களின் ஆலோசனை பெறுவது அவசியமாகும் என காசல் வீதி மகளிர் வைத்தியசாலையின் பிரசவம் மற்றும் நரம்பியல் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் சனத் லெனரோல் தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றுக்குள்ளான கர்ப்பிணிகளுக்கு ஏற்படும் இவ்வாறான அறிகுறிகள் தொடர்பில் வைத்திய நிபுணர் சனத் லெனரோல் மேலும் தெளிவுபடுத்துகையில் –

கொரோனாத் தொற்றுறுதியான கர்ப்பிணிகள் தொற்றிலிருந்து குணமடைந்து சுமார் 4 வாரங்களின்பின்னர்சுவாசிப்பதில் சிரமம், உடல் வலி, தலை வலி போன்ற சில அறிகுறிகள் ஏற்படுகின்றமை இனங்காணப்பட்டுள்ளது. கொரோனாத் தொற்றுக்குப் பின்னரான இந்த அறிகுறிகள் 6 மாதங்கள் வரை காணப்படும். எனினும் இது பாரதூரமான நிலைமை அல்ல.

எவ்வாறிருப்பினும் இது போன்ற அறிகுறிகள் காணப்படுமாயின் துரிதமாக பிரசவ மற்றும் நரம்பியல் தொடர்பான வைத்தியர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கர்ப்பிணிகளை அறிவுறுத்துகின்றோம் என்று தெரிவித்தார்.

# சட்டவிரோத மணல் அகழ்வு திருமலையில் அறுவர் கைது

திருகோணமலை- அக்போபுரபொலிஸ்பிரிவுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோத முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட ஆறு டிராக்டர்களுடன் ஆறு சந்தேகநபர் களை பொலிஸார் கைது செய்துள்ளனர். கந்தளாய் மற்றும் அக்போபுர பகுதியைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் கூறியுள்ளனர்.

அக்போபுர சீனி அலை மூன்றா வது வலயத்தில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட போது சூரியபுர விசேடஅதிரடிப் படையினரால் பொலிஸாருக்குக்கிடைத்த தகவலின் அடிப்படையில், சூரியபுர விசேட பொலிஸாரும் அக்போபுர பொலிஸாரும் இணைந்து அவர்களைக் கைது செய்துள்ளனர்.

இந்நிலையில் சந்தேக நபர்களை கந்தளாய் நீதிமன்றில் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

# வானிலிருந்து விதைகளை தூவும் விமானப்படையினர்










இலங்கை விமானப்படையினர் முன்னெடுத்து வரும் வானில் இருந்து விதைகளை தூவும் திட்டத்தின் 5 ஆவது கட்டம் விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரனவின் ஆலோசனையின்படி அண்மையில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பியம்பலாண்டுவ பிரதேசத்தில் வத்தேகம கெபிலித்த வனப்பகுதியின் 75 ஏக்கர் நிலப்பரப்பு உள்ளடங்கும்வகையில், மரங்களுக்கானவிதைகள் தூவப்பட்டுள்ளன எனவும் 80 ஆயிரம் விதைகள் தூவப்பட்டன எனவும் விமானப்படையினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கை விமானப்படையின் வீரவில முகாமை அடிப்படையாகக் கொண்டு விமானப்படை ஹெலிக்கொப்டர் மூலம் விதைகள் தூவப்பட்டுள்ளன.

2030 ஆம் ஆண்டுக்குள் இலங்கை காடுகளின் பரப்பளவை 27 வீதம் முதல் 32 வீதம் வரை அதிகரிப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கம் எனவும் விமானப்படையினர் கூறியுள்ளனர்.

# கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ள 53 ஆயிரம் சிறுவர்களில் 67 பேர் சாவு!

## வைத்திய நிபுணர் கபில ஜயரத்ன அதிர்ச்சித் தகவல்

நாட்டில் இதுவரையில் 53 ஆயிரத்து 801 சிறுவர்கள் கொவிட் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். இவர்களில் 67 பேர் உயிரிழந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் குடும்ப நல சுகாதார பிரிவின் விசேட வைத்திய நிபுணர் கபில ஜயரத்ன தெரிவித்தார்.

சுகாதாரமேம்பாட்டுபணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –கொவிட் தொற்றின் காரணமாக பதிவான 67 சிறுவர் மரணங்களில் 13 மரணங்கள் வீடுகளிலேயே இடம்பெற்றவையாகும். ஏனையோரில் 95 சதவீதத்துக்கும்அதிகமானோர் மிகவும் காலதாமதமாகவே வைத்தியசாலைகளுக்கு வருகை தந்துள்ளனர்.

நாட்டில் இதுவரையில் சுமார் 53 ஆயிரம் சிறுவர்கள் கொவிட் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். அவர்களில் பெருமளவானோருக்கு சிகிச்சையளித்து உயிரைப் பாதுகாத்திருக்கின்றோம்.

எனினும் உயிரிழந்த சிறுவர்களில் பெருமளவானோருக்கு கொவிட், நிமோனியா நிலைமை ஏற்பட்டிருந்தது. மேலும் சில ருக்கு மிஸ்–சி நோய் தாக்கமும் ஏற்பட்டிருந்தது. கொவிட் தொற்றுக்குள்ளான சிறுவர்களில் பெரும்பாலானோரின் உயிரிழப்பிற்கான பிரதான காரணியாக வைத்தியசாலைகளுக்கு வருவதில் காணப்பட்ட அச்ச நிலைமையே ஆகும்.

கொவிட் அபாயத்திலிருந்து சிறுவர்களைப் பாதுகாப்பதற்கு அவர்களை மிக பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டியது பெற்றோரின் பிரதான பொறுப்பாகும். சிறுவர்களுக்கு கொவிட் தொற்று அறிகுறிகள் ஏற்பட்டால் எவ்வித தாமதமும் இன்றி அவர்களை வைத்தியசா லைகளில் சேர்ப்பதற்கு அல்லது அருகிலுள்ள வைத்தியர்களிடம் அழைத்துச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு லயன்ஸ் கழகத்தால் ஒட்சிசன் கருவிகள்!







சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் கொவிட் விடுதிக்கு வளியில் இருந்து ஒட்சிசனை உருவாக்கித்தரும் கொன்சன்றேற் உபகரணங்கள் மூன்று சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஊடாக மாவட்ட ஆளுநர் லயன் ஆர்.எல்.ராஜ்குமாரால் வழங்கிவைக்கப்பட்டன.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன். ஜெ.மினேஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில்

பிரதம விருந்தினராக 306 பி1 மாவட்ட ஆளுநர் லயன்.ஆர்.எல்.ராஜ்குமார் கலந்து கொண்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் திருமதி டயாளினி மகேந்திரனிடம் இந்த உபகரணங்களைக் கையளித்தார்.

இந்த உபகரணங்களின் மொத்தப் பெறுமதி 10 லட்சம் ரூபா. ஒன்று சாவகச்சேரி லயன்ஸ் கழக உறுப்பினர் லயன் சுந்தரலிங்கத்தின் நிதி உதவியுடனும் இரண்டாவது இன்னார் கொழும்பு லயன்ஸ் கழகத்தினாலும் மூன்றாவது டிறிபேர்க்கல்லூரியின் வெளிநாட்டின் பழைய மாணவர்களாலும் வழங்கப்பட்டது.

ஜனனி தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் -
(தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

# மெய்நிகர் வகுப்பறை

## Online Classroom 41




### மெய்நிகர் தேர்வுக்கான சவால்கள்

மாணவர்களின் கற்றல் அனுபவத்தை மதிப்பீடு செய்து அதற்கேற்ப மீள்வடிவமைப்பைச் செய்ய வேண்டிய காலகட்டத்தில் இலங்கையின் மெய்நிகர் கற்கை காணப்படுகின்றது. பாடசாலைகள் மற்றும் உயர்கல்வியில் தவணைகளுக்கான பாடத்திட்டங்கள் நிறைவடைகின்றன. பல ஆசிரியர்கள் தவணைப்பாடத் திட்டங்களை முடிப்பது மட்டுமே தங்களின் வேலை என்று எண்ணியவர்களுக்கு இப்போது பரீட்சை நடத்த வேண்டும் என்கிறபோது சற்று தளர்வடைகிறார்கள். மெய்நிகர் கற்றலில் சில மாணவர்கள் கற்பதில் பல்வேறு இன்னல்களிற்கு முகம் கொடுத்து போராடுவதை இன்னும் காணக்கூடியதாக இருக்கிறது.

கல்விப்புல உயரதிகாரிகள் கொவிட் முடக்கநிலையில் தொலைதூரக் கற்றலுக்கு விரைவான மாற்றத்திற்காக தங்களைத் தாங்களே முதுகில் கூட்டாகத் தட்டிக்கொள்கிறார்கள். சுய வாழ்த்துக்களில் பெருமை கொள்கிறார்கள். ஆனால் நாம் முட்டுக்கொடுக்க வேண்டிய உண்மையான நபர்கள் மாணவர்கள். அவர்கள் ஒரே நேரத்தில் நிதிச்சவாலையும், வீட்டினரையும், சுற்றுப்புறத்தையும் கற்றல் முறையினையும் அவர்கள் மாற்ற வேண்டியிருக்கின்றது.

அதேவேளை அவர்களின் மிகப்பெரிய போராட்டமாக இருப்பது மெய்நிகர் பரீட்சைகள் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். சரியான நேரத்தில் மெய்நிகர் சோதனைகளை எடுக்க வேண்டும் என்பது அதிக சுய - காயத்துக்கு வழிவகுக்கின்றது. அதாவது,

**1. மன அழுத்தத்தை உருவாக்குகிறது.**

ஒரு தொற்றுநோயின் போது, மெய்நிகர் சோதனைகள் மாணவர்களுக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன. பொதுவாக தொற்றுநோயுற்ற காலங்களில் கூட பரீட்சைகள் மனஅழுத்தத்திற்குரியவை என்பதை மனங்கொள்ள வேண்டும். இங்கு புதிய தொழில்நுட்பம் மற்றும் புதிய பரீட்சை அணுகுமுறைகள் மன அழுத்தத்தை உருவாக்குகின்றன. சோதனை எடுக்கும் சூழலில் மற்ற அனைத்தும் சாதாரணமாகவும் ஆதரவாகவும் இருந்தாலும் இந்த மனஅழுத்தம் ஏற்படும்.

இந்த மன அழுத்தம் மற்றும் பதற்றம் குறுகிய



கால செயல்திறனை பாதிப்பதோடு அதாவது சோதனையின் மதிப்பெண்களில் பாதிப்பை ஏற்படுத்துவதோடு நீண்ட கால பாதிப்புக்களையும் ஏற்படுத்துகின்றது.

**2. அலைவரிசை சிக்கல்களால் ஏற்படும் பாதிப்பு**

ஒரு வீட்டின் இணைய இணைப்பின் அலைவரிசை எப்படி இருக்கிறது? என்பது பரீட்சையில் தாக்கம் செலுத்தும் ஒரு காரணியாகும். ஒரு வீட்டின் அலைவரிசைக்காக சில மடிக்கணினிகள், கைபேசிகள் போட்டியிட வேண்டியிருக்கலாம். அதே போல ஒவ்வொரு அண்டை வீட்டிலும் இணையத்தில் நாள் முழுவதும் இந்த நிலை காணப்படும். அலைவரிசை பகிர்வில் ஏற்படும் நெருக்கடி பரீட்சையில் தாக்கத்தைச் செலுத்துகிறது. இணையசேவையின் மந்தநிலை பற்றிய தகவல்கள் பரவலாக உள்ளன.

அதாவது குறிப்பிட்ட நேர தேர்வுகள், குறிப்பாக ஒரு பக்கத்தில் ஒரு கேள்வியை மட்டுமே காட்டும் தேர்வுகள், அலைவரிசை மற்றும் பிற செயல்திறன் சிக்கல்கள் தேர்வு எழுதுபவருக்கு பாதிப்பை ஏற்படுத்தும். இங்கு கேள்விகளை தரவிறக்கம் செய்வதற்காக மாணவர்கள் காத்திருக்கும்போது அவர்களின் தேர்வு நேரம் குறைவதை அவதானிக்கலாம். இணைய இணைப்பின் வலுவான தன்மைக்கேற்ப இதன் செயற்பாடு அமையும். இந்நிகழ்வு ஆளுக்காள் வேறுபடும். இடத்திற்கு இடம் வேறுபடும்.

நேர தேர்வுகள் மாணவர்களின் கேள்விகளுக்கு விரைவாக பதிலளிக்கும் திறனை அளவிடுகின்றன. ஒரு நேரத் தேர்வு என்பது வேகத்தை மதிப்பிடுவதாகும், அதாவது விடையளிப்பதற்கு முன் சிந்திக்க வேண்டியதைவிட விரைவாக விடைகளைக் கொண்டு வரக்கூடிய மாணவர்கள் புத்திசாலிகள் என்று கணிக்கப்படுகிறார்கள் இந்த நிலைமையில் இணைய மந்தகதி பாதிப்பை ஏற்படுத்தும் எனலாம்.

**3. மோசடிக்கு எதிராக பாதுகாப்பு நெருக்கடி**

சில நேரங்களில் பரீட்சையில் ஏமாற்றத்திற்கு எதிராக பாதுகாப்பதற்காக சரியான நேரத்தில் தேர்வுகளை செய்து முடிக்குமாறு வலியுறுத்தப்படுகிறார்கள். அதாவது மற்ற ஆதாரங்களில் இருந்து பதில்களைக் கண்டுபிடிக்க மாணவர்களுக்கு நேரமிருக்கக்கூடாது என்பதற்காக இந்த நெருக்கடி கொடுக்கப்படுகின்றது. காலக்கேடு, தேர்வுகள் மோசடிக்கு எதிராக பாதுகாக்கின்றன என்ற எண்ணம் ஒரு வகையான கட்டுக்கதைகளில் ஒன்று. உண்மை என்னவென்றால், மாணவர்களை ஏமாற்ற விரும்பினால், அவர்கள் அதற்கு ஒரு வழியைக் கண்டுபிடிப்பார்கள்.

இதனால் மெய்நிகர் தேர்வுகளுக்கு வெப்கேம்கள், கீஸ்ட்ரோக் பதிவு மற்றும் ட்ரோன்கள் சம்பந்தப்பட்ட ஒன்லைன் ப்ரோக்டரிங் அமைப்பை நிறுவலாம். இருந்தாலும் அதன் நன்மைகள் பற்றிய கேள்வியுண்டு.

மெய்நிகர் பரீட்சை இது மிகவும் புதிய அமைப்பு என்பதால், மாணவர்கள் இதை அறியாததால், சில பிரச்சினைகள் எழலாம்.

மெய்நிகர் பரீட்சையின் சவால்களை இனங்கண்டு தீர்ப்பது அவசியமாகும், அதில் இணைய இணைப்பு, கேள்வி வங்கி தயாரிப்பு, தேர்வு விண்ணப்பதாரர்களுடன் தொடர்பு போன்ற விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

கிராமப்புற மற்றும் தொலைதூரப் பகுதிகளில் இணைய இணைப்பு இன்னும் பெரிய பிரச்சினையாக உள்ளது. ஒரே நேரத்தில் பல தேர்வுகள் இருந்



தால், சீரான ஓட்டத்திற்கும் மெய்நிகர் தேர்வை நிறைவேற்றுவதற்கும் மிகப்பெரிய சவாலாக இருக்கும்.

**4. கேள்வி வங்கியின் தரம் மற்றும் அதன் துல்லியம்**

அடுத்து மெய்நிகர் தேர்வின் தரம் கேள்வி வங்கியின் தரம் மற்றும் அதன் துல்லியத்தைப் பொறுத்தது. பரீட்சை நிர்வாகம் வினாத்தாள்கள் உயர் தரத்தில் அமைக்கப்பட்டிருப்பதை உறுதி செய்ய வேண்டும் மற்றும் அவை பொருள் அல்லது பாடத்திட்டத்தின் நிபுணர்களால் தயாரிக்கப்படுகின்றன. இங்கு, கேள்வி வங்கி மேலாண்மை அம்சம் முக்கியமானது , அங்கு வல்லுநர்கள் கணினியில் உள்நுழைந்து அவர்களின் பாடங்கள் அல்லது தலைப்புகளின் கேள்விகளை வடிவமைக்க முடியும். இதில் தேர்வு எவ்வாறு நிர்வாகம் செய்யப்படுகின்றது, மதிப்பெண் விவரம், மொத்த தேர்வு காலம், ஒரு பாடப் பகுதிக்கு மொத்த கேள்விகளின்




எண்ணிக்கை, மதிப்பெண் திட்டம் போன்ற தேர்வு அளவுருக்களை இதில் வரையறுக்கலாம். இது சீராக திறமையாக மேற்கொள்ளப்பட்டால் மெய்நிகர் தேர்வு மாணவர்களுக்கு சிக்கல் நிறைந்ததாக இருக்காது.

இன்று மெய்நிகர் தேர்வுகள் பல இடங்களில் நடத்தப்படுகிறன. தொலைதூர விண்ணப்பதாரர்களுடனான தொடர்பு எந்த ஒரு செயல்முறைக்கும் ஏதேனும் சந்தேகம் அல்லது வினவல்களை தெளிவுபடுத்துவதற்கு அவசியம். இது தேர்வை சுமுகமாக நிறைவேற்றுவதை உறுதி செய்யும். இதற்காக சிறந்த தொடர்பாடல் திட்டத்தையும் கொண்டிருக்க வேண்டும்.

பரீட்சை அட்டவணை மற்றும் உள்நுழைவு சான்றுகள் குறித்து வேட்பாளர்களை எச்சரிக்கும் உக்தி இந்த தேர்வில் அவசியமாகின்றது. இந்தச் செயல் முறையில் மாணவர்களுடன் கைபேசி, மின்னஞ்சல், எஸ்.எம்.எஸ்., மெய்நிகர் அரட்டைத்தளம் மூலம் தொடர்பு கொள்ள முடியும்.

# மாப்பாண முதலியாரின் பூதவுடல் அக்கினியுடன் சங்கமம்





(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் பத்தாவது நிர் வாக அதிகாரி குகஸ்ரீ குமார தாஸ மாப்பாண முதலியாரின் இறுதிக் கிரியைகள் நல்லூரில் உள்ள அவ ரது இல்லத்தில் நேற்று அமைதியான முறையில் இடம்பெற்றன. பூதவுடல் செம்மணி இந்து

மயானத்தில் நண்பகல் 12 மணியளவில் தகனம் செய்யப்பட்டது.

மாப்பாண முதலியார் கடந்த வாரம் நோய் வாய்ப்பட்டு கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுக் காலை இறைவனடி சேர்ந்தார்.

இந்நிலையில், இறுதிக்கிரியைகள் இன்று நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் அமைதியான முறையில் இடம் பெற்றது.

இதில்அரசியல்பிரமுகர்கள், ஆலயத்தொண்டர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து பூதவுடல் முற்பகல் 11 மணி யளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அதன்போது வழிநெடுகிலும் பொதுமக்கள், வீதிகளில் நின்றவர்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

சுகாதார நடைமுறைப்படி ஆரவாரங் கள் எதுவுமின்றி மிகவும் அமைதியான முறையிலே இறுதி ஊர்வலம் இடம் பெற்றது.

## நேற்று தொற்று .........



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத் தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 26 ஆயிரத்து 383 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 468 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றி லிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 80 ஆயிரத்து 97ஆக உயர்வடைந்துள்ளது.

## தமிழ் அரசியல் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப்புலிகளுடன் தொடர்பில் இருந் தார் என்ற சந்தேகத்தின் பெயரில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார்.

சுமார் ஒன்றரை வருட காலம் பயங் கரவாதத் தடுப்புப் பிரிவினரால் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்கப்பட்டதன் பின்னர் கடந்த 15.02.2011 அன்று மொனராகலை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு சிறைச்சாலை விளக்க மறியலில் வைக்கப்பட்டார். கடந்த 12 ஆண்டுகளாக அவருக்கு எதிராக குற்றச் சாட்டுப் பத்திரங்கள் எதுவும் தாக்கல் செய் யப்பட்டிருக்கவில்லை.

இந்நிலையில், சிரேஷ்ட சட்டத்தரணி பஞ்சாட்சரம் நீதிமன்றில் தர்க்க நியாயங்களைச் சுட்டிக்காட்டி கபிலனின் விடுதலையை உறுதி செய்யுமாறு மன்றில் முன்வைத்த கோரிக்கையைப் பரிசீலித்த நீதிமன்றம், குறித்த தமிழ் அரசியல் கைதிக்கு எதிராக குற்றத்தை ஒப்புவிக்க போதிய சாட்சி ஆதாரங்கள் காணப்படாத காரணத்தைக்கூறி அவரை நிரபராதி என விடுதலை செய்துள்ளது.

## அடுத்த வருடத்துக்குள் ..........................................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வாவின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகப் பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கலந்துகொண்டு உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை வரலாற்றின் முதல் தடவையாக, அரசியல்வாதி அல்லாத ஒருவர், நாட்டின் முப்படைத் தளபதியாகவும் ஜனாதிபதியாகவும் பதவி வகிக்கின்றமை குறித்து நான் பெருமையடைகிறேன். நான் ஓர் இராணுவ அதிகாரி என்ற வகையில், நாட்டுக்காக எனது கடைமையைச் செய்தேன். அதனால் தான் இவை சாத்தியமாகின.

பாதுகாப்புச் செயலாளராக எனது கடமையை நிறைவேற்றினேன். அதனால் தான், மக்கள் என் மீது நம்பிக்கை வைத்து, என்னை இந்த நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்திருக்கிறார்கள். இராணுவத்தினர் என்ற வகையில், உங்கள் அனைவருக்கும் இது பெருமைக்குரிய விடயமாகுமென்று நான் நினைக்கின்றேன்.

விசேடமாக இன்று, முப்படையினருக்கும் நன்றி செலுத்த வேண்டும். இந்நாட்டில் கடந்த 2 வருட காலத்தில் நீங்கள் செய்த சேவைக்காகவும், நாம் முகங்கொடுத்த கொவிட் தொற்றைக் கட்டுப்படுத்துவதுக்குச் செய்த தியாகங்கள், செய்த சேவைகள், சுகாதாரப் பிரிவினர் மற்றும் ஏனையோருடன் இணைந்து, முக்கியமாகத் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளிலும் அதேபோன்று தடுப்பூசி வழங்குவதிலும் நீங்கள் ஆற்றிய சேவை மிகச் சிறப்பானது.

கொவிட் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசி ஏற்றலில், உலக நாடுகளுக்கு மத்தியில் நாம் முன்னிலை வகிக்கும் நாடாக மாறியுள்ளோம். அது நீங்கள் ஆற்றிய சேவையினால் தான் சாத்தியமானது. அதற்காக, உங்கள் அனைவருக்கும் நான் நன்றி கூறிக்கொள்கிறேன்.

அதேபோன்று, இந்த நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமையளிப்பதாக, நான் அதிகாரத்துக்கு வந்த பின்னர் கூறினேன். தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை, நான் ஒரு கொள்கை ரீதியில் முன்னெடுத்துள்ளேன். அதற்கு அவசியமான, தகுதிவாய்ந்த அதிகாரிகளை, உரிய பதவிகளுக்கு நியமித்துள்ளேன். பாதுகாப்புச் செயலாளராகவும் சரி படைத் தளபதிகளாகவும் சரி, புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளாகவும் சரி, உரிய இடங்களுக்கு உரியவர்களை நியமித்துள்ளேன்.

அதேபோன்று, முப்படையில் காணப்படும் புலனாய்வுப் பிரிவினரின் மனநிலையை நான் மேம்படுத்தியுள்ளேன். இராணுவ அதிகாரிகளுக்கும் புலனாய்வுப் பிரிவினருக்கும் தேவையின்றி ஏற்படுத்தப்பட்டிருந்த தடைகளைத் தகர்த்திருக்கிறேன். அவர்கள் அவர்களது கடமைகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான அதிகாரங்களை வழங்கியுள்ளேன்.

இந்நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் உருவாகாமல் இருக்கும் வகையில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே எமது பிரதான பொறுப்பாக இருக்கின்றது. நாம் பிரிவினைவாத தீவிரவாதத்தைத் தோற்கடித்தோம். தற்போது அதை நாம் தொடர்ந்து நிலைத்திருக்கச் செய்ய வேண்டும். தீவிரவாதம் தோன்றுவதற்கான காரணங்களைக் கண்டறிந்து, அவற்றுக்குத் தீர்வ வழங்க வேண்டும். அந்தப் பிரதேசங்களை நாம் முன்னேற்ற வேண்டும். அவ்விடங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது அவசியமாகும்.

அடிப்படை மதவாதத் தீவிரவாதம், இன்று முழு உலகிலும் காணப்படுகின்றது. நாம் அதற்கு முகங்கொடுக்க வேண்டும். அவ்வாறான நிலைமையொன்று, எம் நாட்டில் மீண்டும் உருவாகக் கூடாது. இது எந்தவொரு மதத்தையும் தாக்கும் விடயமல்ல. நாம் எல்லோரும் அறிந்த முழு உலகமும் அறிந்த இந்நிலைமைக்கு, நாம் முகங்கொடுக்க வேண்டும். இந்த நாட்டைப் பாதுகாக்க வேண்டும். நான் மக்களுக்கு உறுதியளித்துள்ளேன். நான் அதனை நிறைவேற்றத் தியாக மனப்பான்மையுடன் செயற்படுகிறேன்.

பாரிய எதிர்பார்ப்புகளுடனேயே என்னை இந்நாட்டு ஜனாதிபதியாகத் தெரிவு செய்திருக்கிறார்கள். நான் கடமையேற்ற காலம் முதலான கடந்த இரண்டு வருடங்களில், முழு உலகமும் வரலாற்றில் எப்போதும் முகங்கொடுக்காத நிலைமைக்கு, கொவிட் தொற்று காரணமாக முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டது.

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக, நாம் கடந்த இரண்டு வருடங்களாகப் போராடியுள்ளோம். நாட்டை முடக்குதல், பல்வேறு தடைகள் காரணமாக எமது பொருளாதாரம் பாரிய நிலையில் வீழ்ச்சியடையும் நிலை ஏற்பட்டது. நான் அதற்காக நியாயம் கூறிக்கொண்டிருக்கப் போவதில்லை. மக்களுக்காக இந்நிலைமையிலும் பாரிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம்.

என் மீதும் அரசின் மீதும் மக்கள் வைத்த எதிர்பார்ப்புக்கமைய செயற்படவில்லை என்று அவர்களுக்கு வெறுப்பு ஏற்பட்டுள்ளது. நான் அதனை ஏற்றுக்கொள்கின்றேன். நான் மட்டுமன்றி அமைச்சர்களும் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனாலும், கொவிட் தொற்றைக் கட்டுப்படுத்தி, புதிய இயல்பு நிலைமையின் கீழ் இந்நாட்டைத் திறந்து, புதிய உத்வேகத்துடன் இந்நாட்டை முன்னேற்று வேன் என்று, மக்களுக்கு நான் உறுதியளிக்கிறேன். அதற்காக நாம் அனைவரும் இணைந்து ஒன்றாகச் செயற்பட வேண்டும்.

அன்று நான் உறுதியளித்தவாறு, புதிய அரசமைப்பு ஒன்றை வழங்குவதற்கு, அடுத்த வருடத்துக்குள் நடவடிக்கை எடுப்பேன். மக்களின் எதிர்பார்ப்புக்கமைய, புதிய தேர்தல் முறைமையொன்றையும் அடுத்த வருடத்துக்குள் உருவாக்குவேன்.

நேற்று மாலை நான் ருவன்வெலிசாயவை வழிபடச் சென்றிருந்தேன். அங்கு படிக்கட்டுகளில் ஏறிக்கொண்டிருக்கும் போது, இளம் வயது பிக்கு ஒருவரைச் சந்தித்தேன். அப்போது அவர் என்னிடம் கேட்டார், 'ஜனாதிபதியே, ஒரே நாடு, ஒரே சட்டத்தை உருவாக்குவதாகக் கூறினீர்களே. நாம் அதனை எதிர்பார்த்திருக்கின்றோம்' என்றார். நான் இவ்வருட இறுதிக்குள் அவ்வாக்குறுதியை நிறைவேற்றுவேன்.

சேதனப் பசளைப் பயன்பாடு மற்றும் பசுமை விவசாயத்தை உருவாக்குவதென்பது, நான் அளித்த வாக்குறுதியாகும். அது தான் சரியானதும்கூட. மக்களுக்காக, எதிர்காலச் சந்ததியினருக்காக நாம் அதனை முன்னெடுக்க வேண்டும். அதைச் செய்தேயாக வேண்டும். அது மிகவும் கடினமான விடயமாகும்.

ஊழலை இல்லாதொழிக்க வேண்டுமென்று, மக்கள் என்னிடம் எதிர்பார்த்திருக்கின்றனர். அதனை எதிர்பார்த்துத் தான், அரச நிறுவனங்களின் உயர் பதவிகளுக்கு இராணுவ அதிகாரிகளை நியமித்தேன். அது பாரிய சவாலாகும். ஆனாலும் நாம் அதனைச் செய்ய வேண்டும்.

எந்தத் தரப்பினராக இருந்தாலும், அமைச்சரவோ நாடாளுமன்ற உறுப்பினர்களாகவோ, அதிகாரிகளாகவோ இருந்தாலும் நாட்டுக்காக நாம் ஊழலை முழுமையாக ஒழிக்க வேண்டும். நான் அதற்கு ஒரு முன்னுதாரணமாகத் திகழ்கிறேன். நான் எந்த வகையிலும் ஊழலில் ஈடுபடவில்லை. ஈடுபடவும் மாட்டேன்.

ஜனாதிபதி என்ற வகையில் நான் இயலுமான வரையில் செலவினங்களைக் குறைத்துள்ளேன். நான் ஒரு முன்னுதாரணத்தை வழங்கியுள்ளேன். அந்த முன்னுதாரணத்தை நீங்களும் வழங்குங்கள் என்று அமைச்சர்களிடமும் கேட்டுக்கொண்டேன்.

இந்த ஊழலைத் தடுப்பதற்கு ஒத்துழைக்குமாறு மக்களிடமும் நான் கேட்டுக்கொள்கின்றேன். மக்களுக்காகச் செயற்றிறன்மிக்க பணியை வழங்குமாறு, அதிகாரிகளிடமும் நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். எதிர்வரும் வருடங்களில் இந்நாட்டை சுபீட்சத்தை நோக்கிக் கொண்டு செல்வதற்கு, அனைவரதும் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம் - என்றார்.

# டிசெம்பர் மாதமளவில் மற்றுமோர் அலை!

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அபாய எச்சரிக்கை


இலங்கையில் டிசெம்பர் மாதமளவில் மற்றுமொரு கொரோனா வைரஸ் தொற்று அலை உருவாகும் அபாயம் உள்ளது.

– இவ்வாறு அரச வைத்திய அதிகாரி கள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் கமல் பெரேரா ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று முடிவுக்கு வந்து விட்டது என நினைத்துச் செயற் பட்டால் இந்த நிலை ஏற்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டு, நாடு திறக்கப்பட்டுள்ள நிலையில், மக்கள் கொரோனா வைரஸ் தொற்றை மறந்து செயற்படுகின்றனர் என வும் அவர் சாடியுள்ளார்.

மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடை தொடர்ந்து அமு லில் இருக்க வேண்டும் எனவும் அவர் வலி யுறுத்தியுள்ளார்.



## இராணுவத்தின் ஆண்டு விழாவில் கோட்டா சுமார் 10 ஆயிரத்து 936 பேருக்குத் தர உயர்வு



இலங்கை இராணுவத்தின் 72 ஆவது ஆண்டு பூர்த்தியையொட்டி நேற்று அநுராதபுரம், சாலியபுர இராணுவ முகாமில் பிரதான நிகழ்வு நடைபெற்றது.

பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வாவின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகப் பாதுகாப்பு அமை ச்சரான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கலந்துகொண்டார்.

இதேவேளை, இலங்கை இராணுவத் தின் 72 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 567 இராணுவ அதிகாரிகள் மற்றும் 10 ஆயிரத்து 369 படையினர் தரமுயர்த்தப்பட்டுள்ளனர்.

இராணுவத் தளபதி ஜெனரல் சவேந் திர சில்வாவின் பரிந்துரைக்கு அமைவாக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷவால் இந்தத் தர உயர்வு வழங்கப் பட்டுள்ளது எனப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, 8 சிரேஷ்ட பிரிகேடியர் கள் மேஜர் ஜெனரல் நிலைக்கும், 17 கேர்ணல்கள் பிரிகேடியர் நிலைக்கும், 42 லெப்டினன் கேர்ணல்கள் கேர்ணல் நிலைக்கும், 60 மேஜர்கள் லெப்டினன் கேர்ணல் நிலைக்கும், 256 கப்டன்கள் மேஜர் நிலைக்கும் தரமுயர்த்தப்பட் டுள்ளனர்.

அத்துடன் 10 லெப்டினன் அதிகாரிகள் கப்டன் நிலைக்கும், 2 ஆம் லெப்டினன்கள் அதிகாரிகள் 152 பேர் லெப்டினன் நிலைக்கும், 22 கெடட் நிலை அதிகாரி கள் லெப்டினன் (பொதுப்பணி) நிலைக்கும் 2021 ஒக்ரோபர் 10 ஆம் திகதி இன்று முதல் தரமுயர்த்தப்பட்டுள்ளனர் என்று அறி விக்கப்பட்டுள்ளது.

## காணாமல்போன சிறுவன் வாய்க்காலில் சடலமாக மீட்பு

(ந.லோகதயாளன்)

யாழ்., சங்கானைப் பகுதியில் குளத்துக்குச் செல்லும் வாய்க்கா லில் இருந்து 6 வயது சிறுவன் ஒருவனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சங்கானை, தேவாலய வீதியைச் சேர்ந்த சிறுவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மதியத்திலிருந்து சிறுவன் காணாமல் போயிருந்த நிலையில், உறவினர் களும் பிரதேச வாசிகளும் அப்பிரதேசத்தில் தேடு தலில் ஈடுபட்டி ருந்தனர்.

இதன்போது நேற்றிரவு 9.30 மணி யளவில் குறித்த வாய்க்காலில் சிறுவனின் சடலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசார ணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## முதல் பெண் மாவீரர் மாலதியின் 34ஆவது ஆண்டு நினைவேந்தல்

### சிறிதரன் எம்.பியின் காரியாலயம் இராணுவத்தால் முற்றுகை





தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தில் வித்தாகிப்போன முதலாவது பெண் மாவீரர் மாலதியின் 34ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் ஒழுங்கமை க்கப்பட்ட இடத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் ஈகச்சுடரை ஏற்றி அஞ்சலி செலுத்தி னார்.

நினைவேந்தலைத் தடுக்கும் நோக்கில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் காரியாலயத்துக்கு முன்பாக இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட் டிருந்தனர்.

அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினரின் காரியாலயம் அமைந்திருக்கும் வீதியின் நுழைவாயிலில் தடை அமைத்து அவ்வீதியால் செல்பவர்களுக்குத் தடைகளை ஏற்படுத்தினர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.10.2021 இல் வெளியிடப்பெற்றது.